# மலர்ந்த ஜீவியம்

## ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**செப்டம்பர் 2000 ஜீவியம் 6 மலர் 5**

## இம்மாத மலரில்..........

| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| யோக வாழ்க்கை விளக்கம் IV | 2 |
| இம்மாதச் செய்தி | 17 |
| லைப் டிவைன் | 18 |
| சிறு குறிப்புகள் | 26 |
| அன்பர் கடிதம் | 28 |
| லைப் டிவைன் - கருத்து | 30 |
| பகவானுடைய இதர நூல்கள் | 32 |
| பாஸிட்டிவ் மனோபாவம்-வாழ்க்கையை என்றும் பசுமையாகவும், ஏறுமுகமாகவும் வைத்திருக்கும் நெகட்டிவ் மனோபாவம்-வறட்சியாகவும், இறங்குமுகமாகவும் வைத்திருக்கும் | 34 |
| அஜெண்டா | 39 |
| சாவித்ரி | 41 |
| அன்பர் அனுபவம் | 43 |
| அதிசயங்கள் அன்றாட நிகழ்ச்சிகளாகின்றன | 51 |
| பிரார்த்தனை பலிக்க வேண்டும் | 58 |

❊ ❊ ❊

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**

**வருட சந்தா ரூ.60/-**

# யோக வாழ்க்கை விளக்கம் IV

கர்மயோகி

**யோகியாவதும், கிருகஸ்தனாவதும் பலராலும் முடியக் கூடியதாகும். குடும்ப வாழ்விலிருந்து கொண்டு, யோகம் செய்வது சிரமம். யோகி ஞானத்தை மனத்தின் மூலம் தேடுகிறான். அல்லது இதயத்தின் மூலம் பக்தியைத் தேடுகிறான். குடும்பஸ்தன் ஆசையின் பிடியில் வாழ்கிறான். இவற்றைச் சேர்ப்பதற்கு வாழ்வு மையம் மனத்தையும், பிராணனையும் விட்டகன்று சைத்திய புருஷனை வந்தடைய வேண்டும்.**

***யோகத்தையும், வாழ்வையும், பூரணயோகம் சைத்திய புருஷனில் இணைக்கிறது.***

சைத்திய புருஷன் வெளிவருதல் என்பதை நாம் ஏதாவது ஒரு வகையில் உணர முடியுமா? இறைவன் என்பதைத் தலைவன் என்று உணருகிறோம். அன்றாட வாழ்வில் கட்டுப்பாடு, விரதம் என்பதுண்டு. சமையல்காரன் சமையல் செய்யும்பொழுது சாப்பிடுவது முறையன்று. தின்பண்டம் செய்தால் வாயைக் கட்ட முடியாமல் சாப்பிடுவதுண்டு. நல்ல சமையல்காரன் அதையும் செய்வதில்லை. வீட்டுப்பெண்கள் பக்ஷணம் செய்யும்பொழுது சாப்பிடமாட்டார்கள். இது ஒரு கட்டுப்பாடு. பயந்து கட்டுப்படுவதைவிட, உணர்ந்த தன்னடக்கம் நாமறிந்ததே. சைத்திய புருஷன் வெளிவருதல் என்பது சுதந்திரம் உள்ளபொழுது, நாமே முன்வந்து கட்டுப்பாட்டை மேற்கொள்வதுபோலாகும்.

அம்மனநிலையுடையவர் குடும்பத்திலிருந்தாலும் யோகத்தை மேற்கொள்ளலாம்.

❊ ❊ ❊



**ஸ்ரீ அரவிந்தர் நெப்போலியனாக இருந்தார். அன்னை எலிசபெத் மகாராணியாக இருந்தார் என்பதை அன்னை விவரிக்கின்றார். அவர்கள் தாங்கி வரும் சக்தி நெப்போலியனில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கிருந்தது, வாழ்நாள் முழுவதும் அன்று என்கிறார் அன்னை. காதரீன், லூயி, எலிசபெத் இவர்களில் ஒரு குறுகிய காலமே அன்னை சக்தியிருந்தது. சக்தி தன் காரியத்திற்கு உரியவரைத் தேர்ந்தெடுத்து அவர் மூலம் வந்த வேலையைப் பூர்த்தி செய்து விலகுகிறது. அந்தச் சக்தியுள்ள காலம் அவர்கள் வாழ்வில் பொற்காலமாகும்.**

**கருவியின் வாழ்வில் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்படுவதை சமூகக் கண்ணோட்டத்தினாலோ, மனத்தின் பார்வையாலோ நாம் கணிக்க முடியாது. பொதுவாக அவற்றிற்கு எதிராகவும் இருக்கும். பரிணாம வளர்ச்சிக்குதவும் காரியங்கள் அவை. (Eg. Louise of France played such a role in the life of Louis XIV)**

***நெப்போலியன், எலிசபெத், லூயிபோல் செயல்பட மனத்தால் சமூகத்தைக் கடக்கவேண்டும்.***

❊ ❊ ❊

**நம் ஜீவனின் பகுதிகள் வளரும்பொழுது அடியிலிருந்து நுனிவரை செல்கின்றன. ஒரு பகுதியின் வளர்ச்சி முடிந்தபிறகே அதைத் தாண்ட முடியும். மனம், உடலின் உதவியால் வளர்ந்து, அது தீர்ந்த பின் உணர்வால் வளர்கிறது.**

***ஒரு நிலை பூரணமாகாமல் அடுத்த நிலைக்குப் போக முடியாது.***

உடல், உணர்வு, மனம், ஆன்மா என்பவை ஒவ்வொன்றாய் வளர்கின்றன. 5ஆம் வகுப்பு முடிந்தபின்னரே 6ஆம் வகுப்புக்குப் போவதுபோல் உடல் வளர்ச்சி முடிவடைந்தபின்தான் உணர்வு வளரும். அது முடிந்தபின் மனம் வளரும். நமக்கெல்லாம் ஆன்மீகம் தேவை. ஆனால் மனவளர்ச்சி முடியவில்லை என்பதால் ஆன்மீக வளர்ச்சி ஆரம்பிக்காது.

இப்பொழுது நமக்கு ஆன்மீகமேயில்லையா? என்று தோன்றும். 5ஆம் வகுப்பில் பூகோளம் 5 கண்டங்களைப் போதிக்கிறது. 10வது வகுப்பில் விவரமாகப் படிக்கலாம் என்பதுபோல் நாம் பெறும் ஆன்மீக அனுபவங்களை **outline** போல அறிகிறோம்.

⁕ ⁕ ⁕

**ஆன்மா, உடல், உணர்வு, மனத்தின் உதவியால் வளர்ந்து அவை தீர்ந்தபின் சொந்தமாக வளர ஆரம்பிக்கின்றது. இதை பகவான் "ஆன்மா தன் பிரச்சினைகளை மறப்பது'' என வர்ணிக்கின்றார்.**

***மனத்தைக் கடந்தபொழுது ஆன்மா தன் பிரச்சினையை மறக்கின்றது.***

ஆன்மா 'தன் பிரச்சினைகளை மறப்பது' என்பதை பகவான் விசேஷமாக எழுதுகிறார். அப்படி மறந்தவுடன் பிரச்சினைகள் மறைந்து விடுகின்றன எனவும் கூறுகிறார். புதியதாக நாம் ஒன்றைப்பெற்றால் - உ-ம் வீடு கட்டினால் - அது மனதிலிருந்த படியிருக்கும். நாளானால் அது மறந்து போகும். முதல் தலைமுறையில் குழந்தைகள் படிக்கும்பொழுது வீட்டில் அனைவரும் பரீட்சை எழுதுவதுபோல் பரீட்சையில் அக்கறை கொள்வார்கள். பரம்பரையாகப் படிப்புள்ள குடும்பத்தில் அந்த ஆரவாரமிருக்காது.

மனவளர்ச்சி முடியாவிட்டால் மனம் சுறுசுறுப்பாக இருக்கும். ஆன்ம வளர்ச்சி முடியாத நேரம் ஆன்மா தன் கடமைகளை நினைவு



வைத்திருக்கும். நினைவு இருப்பதால், பிரச்சினை தீராது. நினைவு போய்விட்டது, மறந்துவிட்டது என்றால், ஆன்ம வளர்ச்சி முடிந்துவிட்டது என்று பொருள். முதிர்ச்சி ஏற்பட்டால் பிரச்சினை மறந்துவிடுகிறது.

பிரச்சினையை மறப்பதால், அது தீர்கிறது. எனவே பிரச்சினை தீர இது ஓர் உபாயமாகப் பயன்படும்.

⁕ ⁕ ⁕

**ஒவ்வொரு பகுதியின் வளர்ச்சிக்கும் இரு பிரிவுகளுண்டு. ஒன்று ஜீவாத்மாவின் வளர்ச்சி. அடுத்தது பிரபஞ்சத்தைச் சேர்ந்தது.**

**வளர்ச்சிக்கு இரு பகுதிகளுண்டு. தனித்தது, பொதுவானது என இரண்டு.**

ஜீவன் 4 பகுதிகளாலானது. அதன் இரு பகுதிகளைப் பிரகிருதி, ஆன்மா **(Nature, soul)** என்கிறோம். பிரகிருதி என்பதை இயற்கை, உலகம், பிரபஞ்சம் எனவும் குறிப்பிடுவோம். உதாரணமாக மனம் என்பது ஒரு பகுதி. அதனுள் உள்ள ஆத்மா மனோமயப் புருஷன். பிரகிருதி, இயற்கை, உலகம் என்ற அதன் பகுதியை நாம் அறிவு, எண்ணம், மூளை என்கிறோம். உணர்வு என்பது அடுத்த பகுதி. பிராணமயப் புருஷன் என்பது ஆத்மா, உணர்வு, நரம்பு என்பவை பிரகிருதியாகும். உடலில் உள்ள ஆத்மா அன்னமயப்புருஷன், கை, கால், தலை, உடம்பு, வயிறு போன்றவை இயற்கைக்குரிய பகுதிகளாகும்.

| ஜீவனின் பகுதி | - ஆத்மாவுக்குரியவை | - பிரகிருதி, இயற்கை எனப்படுபவை |
|---|---|---|
| மனம் | - மனோமயப் புருஷன் | - அறிவு, மூளை |
| உணர்வு | - பிராணமயப் புருஷன் | - உணர்வு, நரம்பு |
| உடல் | - அன்னமயப் புருஷன் | - செயல், உடலின் பகுதிகள். |

**ஆன்மா (soul) வளரும்பொழுது (soul) பரமாத்மாவின் துணையை நாடுகிறது. இதிலும் இரு பகுதிகளுண்டு. (Immutable and involved souls) அழியாத ஆத்மா, வளரும் ஆத்மா என அவை இரண்டாக இருக்கின்றன.**

***ஆத்மாவுக்கும் இரு பகுதிகள் உண்டு. அழியாத ஆன்மா, வளரும் ஆன்மா என இரண்டாகும்.***

❊ ❊ ❊

குழந்தை வளரும்பொழுது உடல், மனம் என இருபகுதிகள் உள்ளன. ஒன்றோடு ஒன்று சம்பந்தப்பட்டதாகவே தெரியவில்லை. அதேபோல் ஆத்மாவில் இருபகுதிகள் உள்ளன. அவை.

வளராத ஆன்மா - ஜீவாத்மா

வளரும் ஆன்மா - சைத்தியப் புருஷன்

கிருஷ்ணாவதாரம் பகவத் கீதையைக் குருக்ஷேத்திரத்தில் உலகுக்குக் கொடுத்தது. பிருந்தாவனத்தில் கோபிகைகளுடன் விளையாடியது. உலகப் பெருநிகழ்ச்சிகள் 4இல் இவையிரண்டு என்கிறார் பகவான். சைத்தியப் புருஷன் பிறந்தது கிருஷ்ணாவதாரத்தில்தான். வேதமும், உபநிஷதமும் ஜீவாத்மாவை முக்கியமாகக் கருதினர். அவர்களும் சைத்தியப்புருஷனை கட்டைவிரல் பிரமாணம் என விவரிக்கின்றனர். ஆனால் சைத்தியப் புருஷன் பக்தி மார்க்கத்திற்குரியது என்பதால் கீதை எழும்வரை பக்தி மார்க்கம் தலை எடுக்கவில்லை. மனோன்மணியம் எழுதிய சுந்தரம்பிள்ளை திருவாசகத்தைப்பற்றி எழுதும்பொழுது அது நெஞ்சை உருக்குவதுபோல் 'கனம்', 'ஜடை' என வேதம் ஓதுபவர் நெஞ்சை உருக்குவதில்லை என்கிறார். திருவாசகத்திற்குருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார் எனவும் கூறுவர். பகவான் ஸ்ரீ அரவிந்தர் "ஆழ்வார்களும், நாயனார்களும் சைத்தியப் புருஷனை விழிப்பாகப் பெற்றவர்கள்'' என்கிறார். சைத்தியப்புருஷன் தென்னகத்தில் விழிப்புற்றிருப்பதால்தான் பகவான் புதுவை நோக்கி வந்தாரா? "இப்பகுதியிலிருந்தவர் சத்தியஜீவியத்தைப் பெற்றிருந்ததாகத் தெரிகிறது'' என்றும் பகவான் ஸ்ரீ இராமலிங்க சுவாமியைக் குறிப்பிட்டுக் கூறுகிறார்.



படிப்பு அறிவை வளர்க்கிறது. ஆனால் திறமையைத் தருவதில்லை. அனுபவம் திறமையைத் தருகிறது. ஜீவாத்மா ஒளியையுடையது. சாட்சியாக இருப்பது, சைத்தியப் புருஷன் நம் உடலிலும், உணர்விலும், மனத்திலும் வெளிப்பட்டு நம் எண்ணம், செயல்மூலமாக அனுபவம் பெற்று வளருகிறது.

எண்ணமும், உணர்வும், செயலும் பிரகிருதி. பிரகிருதியின் ஆன்மா சைத்தியப்புருஷன். எண்ணம்மூலம் மனத்தின் அறிவு வளர்கிறது. எண்ணத்திலுள்ள ஆன்மா சைத்தியப் புருஷன். மனம் எண்ணத்தின் மூலம் அறிவு பெறும்பொழுது, மனத்திலுள்ள சைத்தியப்புருஷன் எண்ணத்தின் மூலம் ஆன்மீக அனுபவம் பெற்று வளர்கிறது. இந்த வளர்ந்த ஆத்மா அடுத்த பிறவியில் வளர்ச்சியைத் தொடர்கிறது. நினைவு என்பது மனத்திற்கில்லை. அடுத்த பிறவியில் இப்பிறவியின் நிகழ்ச்சிகள் நினைவுக்கு வாரா, நினைவு சைத்தியப்புருஷனுக்குண்டு. நாம் உள்ளே சென்று சைத்தியப்புருஷனை எழுப்பினால், கடந்த பிறவிகளின் நினைவு நமக்கு வரும்.

நாம் நல்லவர் என்றொருவரைச் சொன்னால், அவருடைய சைத்தியப்புருஷன் விழிப்பாக இருக்கிறது எனப் பொருள். கவி, கலைஞன், எழுத்தாளர் போன்றவர்கட்கு சைத்தியப் புருஷன் முனைப்பாக இருக்கும். ஜீவாத்மா நம் சொத்து போன்றது. சைத்தியப் புருஷன் அதனினின்று வரும் வருமானம் போன்றது.

சைத்தியப் புருஷனை அனைவரும் அறிவார்கள் என்றாலும், அதற்கு பகவான் வரும்வரை எவரும் முக்கியத்துவம் தரவில்லை. முதல் முதலில் ஜீவாத்மாவையும், சைத்தியப்புருஷனையும் பிரித்து உலகிற்கு எடுத்துக் கூறியது ஸ்ரீ அரவிந்தராகும். அவரும் **Life Divine** எழுதும் பொழுது **psychic** என்ற சொல்லைப் பயன்படுத்தாமல்

**soul** என்றே குறிப்பிட்டார். அன்னை வந்தபிறகு **soul** என்ற சொல் **Life Divine**இல் **psychic** என மாற்றப்பட்டது.

> **ஜீவாத்மா விடுதலை பெற்றால் அது மோட்சத்தை நாடும். சைத்தியப்புருஷன் விழிப்புற்றால் அது பூலோகச் சொர்க்கத்தை விழையும்.**

எல்லா அதிகாரங்களும் பெற்ற ஜனாதிபதி எந்த அதிகாரத்தையும் செலுத்தாமலிருக்கும் நிலையை ஜீவாத்மாவுக்கும், எல்லா அதிகாரங்களையும் ஜனாதிபதியிடமிருந்து பெற்றுச் செலுத்தும் பிரதம மந்திரியை சைத்தியப்புருஷனுக்கும் உதாரணமாகச் சொல்லலாம். ஒரு வீட்டிலிருந்து கல்லூரிக்குப் போய் பட்டம் பெற்று, உத்தியோகம் பெற்று நகரத்திலேயே குடியிருந்து கிராமத்திலுள்ள வீட்டை மறந்தவரை மோட்சம் தேடும் ஜீவாத்மா எனவும், கல்லூரிப் பட்டம் பெற்றபின் கிராமத்திற்கு வந்து தான் பெற்ற அறிவை கிராமத்தாருக்குக் கொடுக்க முயன்று அவர் வாழ்வை உயர்த்த முயலும் இளைஞனை சைத்தியப்புருஷனுக்கும் உதாரணமாகச் சொல்லலாம்.

அன்பானவர், சுறுசுறுப்பானவர், வேலைகளைச் சிறப்பாகச் செய்பவர், அதிர்ந்து பேசமுடியாதவர், பிறர் மனம் புண்படப் பேசாதவர், நடக்காதவர், பிறர் குறைக்குத் தாம் பொறுப்பேற்கும் பாங்குடையவர், இசை, கலை, நாட்டியம், சிந்தனை, கவி, எழுத்து வல்லமை படைத்த வர், தன்னை நோக்கிப் பலரைக் கவரும் திறனுள்ளவர், பொய் சொல்லாதவர், சாந்தமானவர், பிறர் வாடும் பொழுது மனம் வாடுபவர், ஆடம்பரம் நாடாதவர், ஆர்ப்பாட்டம் செய்ய முடியாதவர், தனக்கு வரும் தீங்கை அருள் எனக் கொள்பவர், அசுத்தத்தைக் கண்டு மனம் புழுங்குபவர், நன்றியுள்ளவர், இயற்கை எழிலைக் காணுபவர் ஆகியோர் விழிப்பான சைத்தியப் புருஷனையுள்ளவராவார்.

இயற்கையாக சைத்தியப்புருஷனுக்கு நல்லது எது எனத் தெரியும். இயல்பாக சைத்தியப்புருஷன் அன்னையை நாடும் தன்மையுடையது. குழந்தைகள் அவரை விரும்புவர். அவர் கண்களில் ஆன்ம விழிப்பு ஒளியாகத் தெரியும். முகம் தேஜஸ் நிறைந்திருக்கும். எதையும்



சடங்காகச் செய்ய மனம் இசையாது. சைத்தியப்புருஷனுக்குத் தெளிவுண்டு. திறனில்லை. எதைச் செய்வது நல்லது எனச் சிந்திக்காமல் அறியும் திறன் அதற்குண்டு. மனத்தை அதன் வழி நடத்தும் அதிகாரம் சைத்தியப் புருஷன் பெறவில்லை.

❊ ❊ ❊

> **அகம் புறத்தை நிர்ணயிப்பதை ஆன்மா தன் பிரச்சினைகளை மறப்பதென்கிறோம். ஆன்மா பிரச்சினையால் பீடிக்கப்பட்டது, புறம் அகத்தை ஆளும் நிலையாகும்.**

> ***புறம் அகத்தை நிர்ணயித்தால் ஆன்மாவுக்கு பிரச்சினையுண்டு.***

ஆன்மீகத்தை நாடியவர்க்கு அகம், புறம் என்ற பாகுபாடு அவசியம். அகமே அனைத்தும், புறம் அதற்குட்பட்டது என்பது சட்டம். ஆன்மா தன் பிரச்சினைகளை மறந்தால், அகம் எளிதாகப் புறத்தை நிர்ணயிக்கும் என்கிறோம். நாம் பிரச்சினையால் பீடிக்கப்பட்டுள் ளோம் எனில் அகம் மறந்துவிட்டது, புறம் ஆட்சி செய்கிறது எனப் பொருள்.

முதலாளி மேனேஜரிடம் அதிகாரத்தைக் கொடுப்பது, மனைவி அதிகாரம் செய்யும் வீடு, தலைவர் தொண்டருக்குட்பட்ட கட்சி ஆகியவை புறம் ஆட்சி செய்யுமிடங்கள். அகம் தெளிவாக இருந்தால் மேனேஜர் கொட்டம் நடக்காது. கம்பனி ஒழுங்காக நடக்கும். கணவன் தெளிவுள்ளவனானால் வீடு அமைதியாக, அழகாக இருக்கும். கணவன் மனைவிக்குட்பட்டவனானால் மனைவி பலர் எதிரில் கணவனை அதிகாரம் செய்வாள். பிரச்சினை மனைவியின் ஆர்ப்பாட்டம் போன்றது. தெளிவு கணவனுடைய தெளிவைப் போன்றது. கருத்தரங்குகளில் கலந்து கொள்பவரைப் பேசச் சொல்லி அதிலிருந்து நாம் கற்றுக் கொள்ளவேண்டும் என்ற முறை (**consen-sus**) இன்று பரவி வருகிறது. 50லட்சம் செலவு செய்து 5 நாள் 24

பேர் சேர்ந்து மாநாடு நடத்தியபின் என்ன முடிவு என்று அனைவரும் பிறரைக் கேட்கின்றனர். 24 பேரும் அறிவாளிகளானால் எதையாவது பேசலாம். அந்தஸ்து மட்டும் உள்ளவர்க்கு அறிவு இருப்பதில்லை. மாநாடுகள் நடக்கும். முடிவு வாராது. சொந்த எண்ணம் என்பது அகம். அது உள்ளவர் பிறருக்குச் சொல்லமுடியும். அனைவரும் கற்றுக்கொள்ளலாம். புறம், அகத்தை ஆள, புறம் அகத்தின் அளவுக்கு முதலில் உயரவேண்டும். அதுவரை அகமே ஆட்சி செய்யவேண்டும்.

❊ ❊ ❊

**உலகத்தின் செயலை நிர்ணயிக்கும் அமைப்பு ஒன்றுண்டு. (physical organisation) மூன்று துப்பாக்கி வீரர்கள் போன்றவர்கள் (The Three Musketeers) இதற்கடுத்த நிலையிலுள்ள அமைப்பை (life knowledge, emotional organisation) அறிவார்கள்.**

***இலக்கிய பாத்திரங்களுக்கு வாழ்வை அறிய முடியும்.***

பூமி சுழலுகிறது. பகல், இரவு அதனால் ஏற்படுகிறது. இந்த ஆண்டு எவ்வளவு மழை பெய்யும் என்பதை முன் கூட்டிச் சொல்லும் விஞ்ஞானமும், சாஸ்திரமும் உண்டு. வெப்பம், தட்பம், மழை, ஆகர்ஷணம், பகல், இரவு, சூரிய கிரகணம் போன்றவை சட்டதிட்டங்களுக்கு உட்பட்டவை. பண்டைய வான சாத்திரமும், இன்றைய விஞ்ஞானமும் அவற்றை அறியும். **They constitute the laws of physical organisation.** அவை ஜட உலகின் சட்டங்கள்.

வாழ்வு சூட்சும உலகைச் சேர்ந்தது, வாழ்வுக்குரிய நியதியை இந்தியர் கர்மம் எனவும், மேல்நாட்டார் **(rewards & punishments)** சொர்க்கம், நரகம் செல்லும் பழக்கங்களெனவும் பகுத்துள்ளனர். அவற்றுள் பெரும்பாலும் உண்மை. முழுவதும் உண்மையாகாது. இந்தச் சட்டங்களை வாழ்வு நியதிகள் **(rules of life)** எனலாம். உலகப் பேரிலக்கியங்களும், அங்கு வரும் நாயகர் மூன்று துப்பாக்கி வீரர்



போன்றவர்களும் அச்சட்டங்களை அறிவர். அன்னை அவற்றைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். அன்னை நம் பிரச்சினைகளைப் பெரும்பாலும் அச்சட்டங்கள் மூலமாகவே தீர்க்கின்றார்.

நாமும் வாழ்வைக் கவனித்தால் அவற்றை அறியலாம். அந்த ஞானம் அன்னையை மேலும் அறிய பெரிய அளவில் உதவும். இலக்கியத்தினின்றும், வாழ்விலிருந்தும் அச்சட்டங்கள் வெளிப்படும் சில நிகழ்ச்சிகளைக் காண்போம். அதன் சட்டங்கள்:

1) ஒருவர் பயன்படுத்திய பொருளுக்கு அவர் இராசியிருக்கும்.
2) மகான்கள் பிறந்த இடத்திற்கு புண்ணியம் உண்டு.
3) நல்லது செய்தால் நல்லது விளையும் என்ற பொதுக் கருத்தை பகவான் மாற்றி நல்லதிலிருந்து நல்லதோ, கெட்டதோ எழும் என்கிறார்.
4) பாரபட்சமாக ஒருவர் உரிமையை அடுத்தவருக்குக் கொடுத்தால், பலன் பெற்றவரிடம் போவதற்கு பதிலாக, உரிமையுள்ளவருக்குப் போகும்.
5) வாழ்வு பலன் தரும்பொழுது நாம் செய்த செயலைப் புறக்கணித்து நம் மனநிலைக்குரிய பலனைத் தரும்.
6) தான் ஆழ்ந்து விரும்பியதைப் பெறும் திறன் மனிதனுக்குண்டு.
7) ஆழ்ந்த ஆசைகள் என்றாவது ஒரு நாள் தானே பூர்த்தியாகும்.
8) நமது பொறாமையால் நமக்கு வர வேண்டியவை நாம் பொறாமைப்பட்டவர்க்குப் போய்ச் சேரும்.
9) வலிமையுள்ளவனுடைய குறைக்கும், தவற்றுக்கும், தண்டனையில்லை.
10) எளியவனுடைய நல்ல செயலுக்குப் பரிசு அவனுக்கில்லை.
11) மனம் பலனை எதிர்பார்த்தால் வாராது. அல்லது தள்ளிப்போகும்.
12) இச்சையற்றவர்க்குச் சித்திக்கும்.
13) அநியாயத்தைத் தொடர்ந்து அனுபவித்தவனுக்கு முடிவில் நியாயம் உண்டு.
14) மனம் உணர்வை அளவு மீறிக் கட்டுப்படுத்தினால் மரணம் விபத்து

மூலம் வரும்.

15) ஒருவர் செய்த புண்ணியத்தால் அவர் அடுத்தவருக்கு மோட்சம் தரமுடியும்.

16) ரமணமகரிஷி பழனிசாமிக்கும், தாயாருக்கும் மோட்சம் அளித்தார்.

17) இறைவனை பூஜிப்பதைவிட எதிர்த்தால் மோட்சம் விரைவில் கிடைக்கும். இரண்யனும், இராவணனும் இதுபோல் மோட்சமடைந்தார்கள்.

18) அறியாமல் செய்த பாவமும் அதன் பலனைத் தசரதனுக்கு புத்ர சோகம் தந்ததுபோல் தரும்.

19) ஏகலைவன்போல் குருவின் வித்தையை அவர் ஆன்மாவுடன் தொடர்பு கொண்டு அறியலாம்.

20) உலகில் ஓரிடத்தில் ஒரு ஞானம் எழுந்தால், அதுதானே பரவும் தன்மையுடையது.

அன்பர்கள் அன்னை எழுதியவற்றை ஊன்றிப் படித்தும், வாழ்வை கூர்ந்து பார்த்தும் இதுபோன்ற எல்லாச் சட்டங்களையும் அறியலாம்.

❋ ❋ ❋

**அடுத்த உணர்வு நிலையை அறிபவர்களுக்கு வாழ்வு எப்பொழுதும் முழுவதுமாக ஒத்துழைத்து வெற்றியை மட்டும் தரும்.**

***உணர்ச்சியை அறிந்தால் காரியம் முடியும்.***

நாம் அறிவால் செயல்படுகிறோம். அடுத்தது **emotions** உணர்வு. அறிவு ஏற்றதை உணர்வும் ஏற்றால் செயல் தடையின்றிப் பூர்த்தியாகும். ஆபீஸ் வேலையைக் கடனே எனச் செய்கிறோம். பலன் அரை குறையாக வருகிறது. அக்கரையாகச் செய்தால் அரைகுறைப் பலன்கள் முழுப் பலன்களாக மாறும். வாழ்வில் நெடுநாளாகப் பூர்த்தியாகாத பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிகளில் இதுவும் ஒன்று.

- 6,7 வருஷமாக பெண்ணுக்குத் தேடும் வரன் அமையவில்லை.



- தொடர்ந்து 4 எலக்ஷனில் நிற்கிறேன். வெற்றி கிடைக்கவில்லை.
- பிரபலமான தலைவருக்குப் பொற்கிழி சேர்த்தோம். வசூலாகவில்லை.
- 80 ஏக்கர் நிலம். எவ்வளவோ பாடுபட்டும் ஓராண்டும் அத்தனையும் பயிர் செய்ய முடியவில்லை.
- 4 தலைமுறையாகப் பல பாக்டரிகளிருந்தும் செல்வம் சேரவில்லை.
- வக்கீலாக 30 வருஷ சர்வீஸில் 10 கேசும் ஜெயிக்கவில்லை என்பவை நாம் அறிந்த பிரச்சினைகள்.

மனம் ஈடுபட்டு, அக்கரையும் ஆர்வமும் கொண்டு காரியம் செய்யாமல் கடனே என செயல்படுவதால் மேற்சொன்ன நிலை ஏற்படுகிறது. வக்கீல் கட்சிக்காரன் விஷயத்தில் தம் சுயநலத்தால் அக்கரையில்லாமலிருக்கிறார். 80 ஏக்கரும் பயிரிட்டால் 4 பேர் உடன் பிறந்தவரும் பங்கு கொள்வார் என்பதால் பயிரிடுபவர்க்கு ஆர்வமில்லாமலிருக்கும். இவற்றை அனைவரும் புரிந்துகொள்ள முடியும். பெண்ணுக்கு வரன் அமையவில்லை. பாக்டரி பலன் தரவில்லை. இவர்கள் தங்கள் சொந்த நலனுக்கு உழைப்பவர்தாமே எனக் கேட்கலாம்.

பெண்ணுக்கு வரன் தேடும்பொழுது, தேடுவதை முக்கியமாகக் கருதி உழைத்தால், உழைப்பு பல சமயங்களில் பலன் தரும், சில சமயங்களில் தாராது. தாராத சமயம் மனத்தைச் சோதனை செய்யத் தோன்றாது. மனம் பெண் திருமணத்தை நாடுவது உண்மை. ஓடியாடித் தேடுவதும் உண்மை. ஆனால் பலனில்லை எனில் மேற்சொன்ன சட்டம் பலன் தரும். அடுத்த உணர்வு நிலை என்பது இங்கு என்ன? பெண்ணுக்கு வயதாகிறது. அவள் திருமணம் தடைப் படுவதால் அவள் மனம் எப்படி வேதனைப்படும் என்று கருதினீர்களா? என்றால், இல்லை எனப் பதில் வரும். 6,7 வருஷமாகத் தேடுவது உண்மைதான். ஆனால் மகளுக்குத் திருமணமாகவில்லையே என மனம் புழுங்கியதுண்டா? எனில் நான்தான் தேடிக்கொண்டிருக் கிறேனே எனப் பதில் வரும். அந்நிலையில் உணர்வு குறைவு என்று கண்டு, அதைப் பூர்த்தி செய்தால் – ஆழ்ந்துணர்ந்தால் – அடுத்த

நாள் வரன் அமையும். அதுபோன்ற உணர்வில்லாதவர் அன்னையை அழைத்தால், அன்னை நம் அம்சங்கள் அத்தனையையும் தீவிரமாக்கும்பொழுது, உணர்வும் ஆழ்ந்து சென்று அவ்வுணர்வு நிலையை நிரப்புகிறது. அது பலன் தருகிறது.

பாக்டரியில் பலன் வரவில்லை என்றால் "இவர் உழைப்பதில் குறையில்லை. ஆனால் மனம் ஈடுபட்டு உழைப்பதில்லை" என்பதை இவர் சிப்பந்திகள் அறிவர்.

தம் உளநிலையை உணர்ந்து மாறினால் பலன் உண்டு. அன்னையை விவரம் தெரியாமல் இதுபோன்றவர் நாடினாலும், பாக்டரிக்காகப் பிரார்த்தனை செய்யாவிட்டாலும், தானே பாக்டரி அன்னை ஜீவியத்தால் நிரப்பப்பட்டு, மனம் அடுத்த நிலை உணர்வால் நிரம்பும். பலன் தானே எழும்.

❊ ❊ ❊

**பிறப்பில் தாயை விட்டுப் பிரிக்கும் இனம் போலவோ, செடியைப் போலவோ மனிதன் வளருவதில்லை. உணர்வால் குடும்பமும், வாழ்வில் சமூகமும் அதன் ஸ்தாபனங்களும், மனிதனுக்கு உயிரையும், உதவியையும் அளிக்கின்றன.**

**ஏதோ ஒரு சமயம் ஒரு சமூகத்தினருக்கு அல்லது ஓர் ஊரிலிருப்பவருக்கு உலகிலில்லாத ஆதரவு வரும். தனி மனிதரோ, ஸ்தாபனமோ முன் வந்து உதவுவதுண்டு.**

**தம்மை நாடி வருபவர்க்கு அன்னை இந்த விசேஷ ஸ்தாபனங்கள்போல் உதவுகிறார்.**

**தாமே அவர்களுடைய இஷ்ட தேவதையாகி அன்பையும், ஆதரவையும் வழங்குகிறார்.**



***உலகிலுள்ள எல்லா அமைப்புகள் போலவும் அன்னை நம் வாழ்வில் செயல்படுகிறார்.***

❊ ❊ ❊

மனிதன் தனியாய், தானே வளருவதில்லை. வளரமுடியாது. குடும்பம் அவனுக்கு எல்லாம். குடும்பத்திற்கு சமூகமே எல்லாம். சமூகத்தை விட்டு குடும்பம் விலக முடியாது. தனிமனிதன் குடும்பமில்லாமல் மொட்டை மரமாகிவிடுவான்.

ஏதோ ஒரு சமயம் ஓர் ஊருக்கு பேர் உதவி வருவதுண்டு. அது வந்தால் அவ்வூர் பெரிய அளவில் முன்னேறும். இதை எதிர்பார்க்க முடியாது. அனைவருக்கும் கிடைக்காது.

மகாராஷ்ட்ராவில் ஓர் ஊருக்கு இதுபோல் ஏரிக்கரை வந்தது. ஆனால் நீர் மட்டம் தரைக்கடியில் உயர்ந்தது. போர் கிணறுகள் வந்தன. வளம் செழித்தது. பாங்க் கிராமங்களைச் சுவீகாரம் எடுத்துக் கொள்வதுண்டு. பொதுவாக இதைப்போல் ஊருக்கு அதிர்ஷ்டம் என்று வந்தால் அது பள்ளிக்கூடமாக இருக்கும்.

பள்ளிக்கூடம், போர்க்கிணறு, ஏரிக்கரை, கோவாப்பரேட்டிவ் சொஸைட்டி, ரோடு, சர்க்கார் திட்டம், **T.V. centre**, போன் வசதி, கடன் உதவி, பாங்க் என எந்தக் கிராமத்திற்கும் எல்லா உதவிகளும் வருவதில்லை. அன்னையை அறிந்த மனம், அவர் அவதார அம்சம் என்ன என்று புரிந்து கொண்டு தம் அறிவாலும், உணர்வாலும், செயலாலும், குடும்பத்தாலும், தொழிலாலும், நல்ல குணத்தாலும், முயற்சியாலும், கட்டுப்பாட்டாலும் அன்னையிடமிருந்து பெறக்கூடியவை எவை என அறிந்து பெற முயன்றால், அவருக்கு அத்தனையும் கிடைக்கும். அன்பர்கள் வாழ்வில் அனைவருக்கும் ஒன்றிரண்டு அம்சங்கள் தவறாது கிடைத்துள்ளன. சிலருக்குப் பலவும் கிடைத்துள்ளன. அத்தனையும் பெற்றவர் மிகச் சொல்பம். சிறப்பான ஒருவர் வாழ்வில் தொடர்ந்து நடந்தவற்றைக் குறிப்பிடுகிறேன்.

- நிலையற்ற வருமானம் மாறி நிரந்தர வருமானம் வந்து பெருஞ்

செல்வர் என அச்சிற்றூர் கருதும்படி மாறியது.

- ஆண்டுக்கு ஒரு பஸ் ரூட் வாங்கினர்.
- ஒதுக்கப்பட்ட குடும்பம் மரியாதை பெற்றது.
- பிளாக் சேர்மன் பதவி வந்தது.
- MLA பதவி வந்தது.
- ஒரு பாக்டரி வாங்கினர்.
- மந்திரி நண்பரானார். முதல்வர் வேண்டியவரானார்.
- பெருந்தொழில் அமைந்தது.
- விலகி ஒதுங்கியவர், நெருங்கிவந்து உதவிகேட்டுப் பெற்றனர்.
- பிள்ளைகள் வெளிநாட்டுப் படிப்புக்குப் போனார்கள்
- பெரிய இடத்துச் சம்பந்தம் வந்தது.
- பெருஞ் செல்வம் உண்மையிலேயே தேடி வந்தது.

நம்மையும், நம் குணங்களையும், திறமைகளையும், சந்தர்ப்பங்களையும், குறைகளையும், போக்கையும் உணருவது எளிதன்று. அன்னை எவற்றையெல்லாம் கொடுப்பார், எப்படிக் கொடுப்பார், எப்பொழுது கொடுப்பார், ஏன் கொடுப்பார், எப்பொழுது கொடுக்கமாட்டார் என்றறிவது எளிதன்று. இவையிரண்டையும் அறிந்து அவற்றைப் பெற்றுப் பயனடைய முயல்பவர் தவறாது முழுப் பலனடைவர்.

❋ ❋ ❋

**ஜீவிய மணி**

மனிதனுக்கு இறைவன் பிடிபடமாட்டான். இறைவனுக்கு மனிதன் உட்படுவான்.



# இம்மாதச் செய்தி

**அன்னையே, உன்னையே இரவு பகலாக அழைப்பதையே பெரும் பாக்கியமாக நான் நினைத்துச் செயல்படும்பொழுது நீ என்னை நாடி வந்து, என் குரலை ஏற்று என் ஜீவனிலும் உடலிலும் கலந்து மறைந்து விட்டாய். இதையறியாமல் நான் உன்னை அழைக்க முடியவில்லையே என பிரமித்து நிற்கிறேன்.**

❋ ❋ ❋

## VIII. The Methods of Vedantic Knowledge

*Page No: 69*
*Para No: 15*

Human reason is demanding.
It asks for its own method of satisfaction.

In later days speculation began.
They were rationalistic.
Indian philosophers respected the past.
The past brought a heritage.
Therefore they took a double attitude.
They sought the Truth thus.
They recognised the Sruthi.
It is the earliest result of Intuition.
They called it inspired Revelation.
It was an authority.
It was superior to Reason.
They started from Reason.
They tested its results.
Verified with the supreme authority.
Accepted those sanctioned by it.
Metaphysics has a besetting sin.



## 8. வேதாந்த ஞானம்

மனிதன் தன் பகுத்தறிவை வலியுறுத்துகிறான்.
தன் போக்கில் தன்னைத் திருப்திப்படுத்த வேண்டும் என்பது அவன் கொள்கை.
பிற்காலத்தில் வாதம் எழுந்தது.
அவை பகுத்தறிவுக்குரியவை.
இந்திய ஞானிகள் கடந்ததைப் போற்றினர்.
கடந்தது உயர்ந்தது.
எனவே ஞானிகள் இரு வழிகளை நாடினர்.
சத்தியத்தை நாட அவர்கள் பின்பற்றிய உபாயமிது.
சுருதியை அவர் ஏற்றனர்.
நேரடி ஞானம் முதலில் உற்பத்தி செய்தது அதுவே.
அதை ஞானோதயம் என்றனர்.
அது முடிவான சாஸ்த்திரம்.
அறிவைவிட அது உயர்ந்தது.
வேதாந்த ரிஷிகள் அறிவை ஏற்றனர்.
அதன் முடிவைச் சோதித்தனர்.
முடிவான சாஸ்திரங்களுடன் அதை ஒப்பிட்டனர்.
அது ஏற்றதை அவர் ஏற்றனர்.
தத்துவம் குதர்க்கமானது.

It is a battle in the clouds.
It deals with words.
They treat words as imperative facts.
Words are really symbols.
We must scrutinise the words.
We must restore the original sense.
Thus, they avoided the pitfalls.
They did speculate.
They chose the highest experience.
It was the profoundest experience too.
That kept them at the centre.
They sought the consent of Intuition.
They also sought it from Reason.
To them, both were great authorities.
Reason subordinated sometimes.
It dominated at other times.
The natural trend was to assert itself.
The supremacy of Reason triumphed.
So, conflicts arose.
Several schools arose.
They sought support in the Veda.
Its texts were used against the others.

Intuitive Knowledge is the highest.
It sees things in the whole, in the large.
To it, details are only sides of the whole.



அது விதண்டாவாதம்.
பதப்பிரயோகம் அதற்கு முக்கியம்.
சொற்களை அவர்கள் புனிதமாகக் கருதுகின்றனர்.
சொல் என்பது ஓர் அறிகுறி.
நாம் சொற்களை ஆராயவேண்டும்.
மூலத்தின் புனிதத்தைக் காண வேண்டும்.
இவ்வழியாக அவர்கள் தவற்றை விலக்கினர்.
அவர்கட்கும் யோசனை எழுந்தது.
முடிவான அனுபவத்தை நாடினர்.
அது உச்சகட்ட அனுபவம்.
அதை மையமாக்கினர்.
அதற்கு ஞானத்தின் உத்தரவை நாடினர்.
அறிவு சொல்வதையும் கேட்டனர்.
இரண்டும் முக்கியமே.
சில சமயங்களில் அறிவு தோற்றது.
மற்ற நேரம் அறிவு வென்றது.
வெற்றியே வென்றது.
முடிவாக அறிவு தன் வெற்றியை நிலைநாட்டியது.
எனவே, பிணக்கெழுந்தது.
பல கட்சிகள் பிறந்தன.
வேதத்தை ஆதரவுக்காக நாடினார்.
வேத சூக்தங்களை ஒருவருக்கெதிராக அடுத்தவர் பிரயோகம் செய்தனர்.
ஞானம் முடிவானது.
அது முழுமையானது.
விவரங்கள் அதற்கு இரண்டாம்பட்சம்.

It tends to synthesize.
It seeks unity of knowledge.
Reason proceeds by analysis.
It divides and assembles its facts.
It tries to form a whole.
The assemblage is an assortment.
There are opposites.
Anomalies abound.

Logical incompatibilities come in.
Reason affirms some.
It negates the others.
It tries for a system.
It aims at a flawless, logical one.
The original unity of knowledge is broken up.
It was intuitional knowledge.
The logicians had an ingenuity.
They discovered devices of value.
Methods of interpretation arose.
Standards of varying value were there.
The logicians denied the inconvenient ones.
They acquired a certain freedom.
Metaphysics came into its own.

*Page No : 70*
*Para No : 16*

The main conceptions of Vedanta remained.
They were parts of the new systems.



முழுமையையே எப்பொழுதும் நாடுவது அதன் வழி.
ஞானத்தின் முழுமையை நாடிப் போனார்கள்.
அறிவு ஆராய்கிறது.
அது பிரித்தும், சேர்த்தும் பார்க்கிறது.
ஒரு முழுமையை அதுவும் நாடுகிறது.
அதன் முடிவு அர்த்தமற்றது.
அதனுள் பொருத்தமில்லாதவை, எதிரானவை, தர்க்கத்திற்கு ஒவ்வாதவை கலந்துள்ளன.
அறிவு சிலவற்றை ஏற்கிறது.
மற்றவற்றை எதிர்க்கிறது.
ஓர் ஒழுங்கை ஏற்படுத்த முயல்கிறது.
தவறற்ற, தர்க்கரீதியான முடிவை நாடுகிறது.
என்றாலும், ஆரம்பமுழுமை சிதைந்துவிட்டது.
அது ஞானம்.
தர்க்கவாதி கெட்டிக்காரன்.
வலுவான மார்க்கங்களை அவன் கண்டான்.
முறைகள் எழுந்தன.
பல நிர்ணயங்கள் வந்தன.
சரிவாராததை தர்க்கம் ஏற்கவில்லை.
எனினும், தங்களுக்கு ஒரு சுதந்திரம் ஏற்படுத்திக் கொண்டனர்.
தர்க்கம் முடிவாக வென்றது.
வேதாந்தக் கரு உயிருடனிருந்தது.

அவை புதிய தத்துவங்களால் ஓரளவு ஏற்கப்பட்டன.
புதியவர் வந்தனர்.

Fresh efforts always arose.

They tried to combine these parts.

They were true to the original catholicity.

It was of the intuitional thought.

Thoughts were variously presented.

Purusha, Atman, Sat Brahman, the Pure Existent were the original conceptions.

They were fundamental.

They all survived in some form.

Their reality was inexpressible.

It was its old burden.

The new presentation was a rationalised one.

Becoming is the world.

It is a movement.

Existent is an absolute unity.

What is their relationship?

Is ego generated by the becoming?

Has ego created the world?

How can it return to the Self?

Self is Divinity or Reality.

Vedanta declares these truths.

Indian thought was occupied by these questions.

Sometimes there were speculations.

At other times these were practical.

The end.



இப்பகுதிகளை ஒன்று சேர்க்க முயன்றனர்.

ஆரம்பப் புனிதத்தைத் தாங்கி வருபவை அவை.

அவை ஞானத்திற்குரியவை.

தத்துவங்கள் பல ரூபங்களில் பவனி வந்தன.

புருஷன், ஆத்மா, சத் பிரம்மம் ஆகியவை ஆரம்பத்திற்கு உரியவை.

அவை அடிப்படையானவை.

ஏதோ ஒரு வகையில் அவை நிலை பெற்றிருந்தன.

சத்தியம் சொல்லுக்குப் புலப்படவில்லை.

அதுவே பழைய பல்லவி.

புதிய தத்துவங்கள் அறிவுக்குரியவை.

உலகம் பிரகிருதி எனும் இயற்கை.

அது சலனம்.

சத் முழுமையானது.

இவற்றிடையேயுள்ள தொடர்பெது?

அகந்தையை உலகம் சிருஷ்டித்ததா?

அகந்தை பிரகிருதியை சிருஷ்டித்ததா?

எப்படி அகந்தை சத் புருஷனை அடைய முடியும்?

சத், சத்தியம், தெய்வம் என்பவை அடிப்படை.

வேதாந்தம் இவற்றை உலகுக்களித்தது.

இக்கேள்விகள் நம் முன் இருந்தன.

சில சமயங்களில் அவை வாதங்களாக இருந்தன.

மற்ற நேரங்களில் இவை உண்மையாக இருந்தன.

முற்றும்.

# நான் புடவை அணியக்கூடாதா?

- ஸ்ரீ அரவிந்தர்

சூட்சும உலகில் அன்னை ஸ்ரீ அரவிந்தரை 1959லிருந்து சந்திக்க ஆரம்பித்தார்.

* பல அம்சங்களில் சூட்சும உலகம் நம் உலகம் போலிருக்கும்.
* இது ஆவி உலகமன்று. ஆவி உலகத்திற்கு சூட்சுமம் (subtlety) உண்டு என்பதால் ஆவியுலகிலுள்ளவர்களை இங்குக் காணலாம். நம் பாஷையில் நாம் ஆவியுலகம் என்பது ஆத்மாவும், ஆவியும் கலந்துள்ள உலகம்.
* உயிரோடிருப்பவர்களையும் பொதுவாக இரவில் அன்னை இவ்வுலகில் சந்திப்பார்
* இந்த சூட்சுமம் மனம், உடல், உணர்வுக்குண்டு.
* பல அம்சங்களில் இவ்வுலகம் நமக்குப் புரியாது.
* கனவில் சூட்சும லோகம் எளிதில் தெரியும்.
* தியானத்திலும் தெரியும்.
* சூட்சுமமானவர்க்குக் கண் விழித்திருக்கும்பொழுதே தெரியும்.

இவ்வுலகில் அன்னை ஸ்ரீ அரவிந்தரை ஒரு நாள் சந்தித்த பொழுது அவர் புடவை உடுத்தியிருந்தார். அன்னைக்கு சிரிப்பு வந்தது. 'ஏன் நான் புடவை உடுத்தக் கூடாதா?' என்று கேட்டார். ஊதா நிற ஜார்ஜெட் புடவை அது. அது அன்னையின் புடவை. தங்க ஜரிகை போட்டது. ஸ்ரீ அரவிந்தருடைய முடியை அன்னை ஜடையாகப் பின்னுவது வழக்கம். அதுபோல் அப்பொழுது முடியைப் பின்னும்படிச் சொன்னார். அப்பொழுது அன்னை ஸ்ரீ அரவிந்தருடைய கழுத்துப்பாகம் பிரகாசமாக இருப்பதைக் கண்டார். பிரகாசம் என்பதும் சுயம்பிரகாசம் என்பவையும் வேறு வேறு, மேலே பளபளப்பாக இருப்பது பிரகாசம். உள்ளிருந்து ஒளி எழுவது சுயம்பிரகாசம். ஸ்ரீ அரவிந்தருடைய முடி அவருடலிலிருக்கும்பொழுது முழு வெண்மையாக இருந்ததில்லை. ஒருவகையான மஞ்சள் பளபளப்பிருக்கும், இப்பொழுது பொன்னிறமாக இருந்தது.

"அவருடைய முடி இங்குள்ளவருடைய முடியைப் போலில்லை. என் முடியைப் போலிருந்தது" என்கிறார் அன்னை.

இக்காட்சியை நிஜமாக மாற இடந்தருவதில்லை. இந்நிலையில் காண்பவை எல்லாம் அற்புதமாக இருப்பதால், நாம் அனைத்தையும் ஏற்கிறோம். மாறவேண்டும் என்ற மனநிலையுள்ள இடமன்று அது. சிருஷ்டிக்குரிய சக்தியைக் கடந்த நிலையில் தெரியும் காட்சியிது. நம் நிலையில் நாம் மாறப் பிரியப்படுகிறோம். அது அவசியம். இது மேல் நிலை, அங்கு எல்லாம் பொன் போன்றவை. மாறவேண்டியது நம் பார்வை. சூழ்நிலையன்று என்கிறார் அன்னை.

❊ ❊ ❊



## ஸ்ரீ அரவிந்த சுடர்

எப்படிப் பார்த்தாலும் முதற்படி ஆசையை அழிப்பதாகும். ஆசையை முழுவதும் அழிக்க முடியவில்லை என்றால் ஒரு செயலில் ஆசையை அழித்து, தெளிவுபெற்று சைத்தியப் புருஷனை அச்செயலில் வெளிப்படுத்தவேண்டும். ஆசையழிந்த பின்னரே அடுத்தது.

# அன்பர் கடிதம்

அன்னைக்கு வணக்கத்துடன் எழுதிக்கொள்ளும் கடிதம்.

சமீபத்தில் என் அண்ணன் மகன் எனக்கு அன்னையின் படம் **(calender)** அன்புடன் கொடுத்தார். அதை நான் என் திருச்சி வீட்டில் மாட்டிவைத்து அன்னையை வணங்கி வருகிறேன்.

*1)* அன்னையின் படம் வந்தவேளை, நானும், விடுமுறைக்கு என் வீட்டிற்கு வந்த மகன், சிறுவயது பேரனுடன் மதியவேளை உணவு சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது உத்திரத்திலிருந்து ஒரு கனமான மரக்கட்டை இரும்புக்கொக்கியுடன் என் பேரன் சமீபத்தில் தடாலென்று விழுந்தது. **Fan**-மேல் பட்டு விழுந்ததால் என் பேரன் உட்கார்ந்து இருக்குமிடத்துக்கு வெகு அருகில் வீழ்ந்தது. அன்னையின் அருளால் என் பேரன் அடிபடாமல் தப்பித்தான். எங்களுக்கும் போன உயிர் திரும்பி வந்தது. இது அன்னையின் அருளேயன்றி வேறில்லை.

*2)* என் மனைவி பேரிலும் என் பேரிலும் **joint savings account** ஆரம்பிக்க என் **Indian Bank** உத்யோகஸ்தரை கேட்டதற்கு அவர் முடியாது என்று முதல் நாள் சிறிதும் மரியாதை இன்றிச் சொல்லி விட்டார். எனக்கோ அந்த **account** ஐ எப்படியாவது ஆரம்பிக்க வேண்டும் என்று எண்ணம். அன்று பூராவும் அன்னையை நினைத்துக்கொண்டு வேண்டிக்கொண்டிருந்தேன்.

மறுநாள் **Bank**க்கு சென்றபோது அதே அதிகாரி **account** ஆரம்பிக்க ஒத்துக்கொண்டதுடன் பரிவுடனும் பேசினார்.

அதற்கும் மறுநாள் நானும் என் மனைவியும் சென்று அந்த **account** ஐ ஆரம்பித்து வந்தோம். அந்த அதிகாரி எங்களுக்கு மிகவும் ஆதரவாக இருந்தது, அன்னையின் அருளேயன்றி வேறில்லை.



*3)* என் மூத்த சகோதரி உடல்நிலை மிகவும் ஆபத்தாக உள்ளது என்று செய்திவந்து நாங்கள் திருவாரூர் வந்தபோது அவர்கள் உடல்நிலை தேறி வருவது கண்டு மிகவும் மன நிம்மதி அடைந்தோம். இதுவும் அன்னையின் அருள்.

*4)* எனது நீண்ட நாள் வேண்டுதல் அதாவது என் மகன் இரண்டு வருடங்களாக வேலையின்றி இருக்கிறான். அவனுக்கு வேலை கிடைக்க நான் தங்களுக்கு வேண்டுதல் அனுப்பியுள்ளேன். அவனுக்கு நல்ல வேலை கிடைக்க அன்னையின் அருளை, மிகவும் நம்பிக்கையுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

❋ ❋ ❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஆசை மனிதனைத் தீவிரப்படுத்தும். அதுவே இறைவனிடமிருந்து மனிதனை எட்டவைத்து உள்ளது. நம் ஆசையை விட்டு, இறைவன் மீது ஆசைப்படுவது மனித சுபாவத்தை தெய்வ சுபாவமாக்குவதாகும். **vital** பிராணனில் இருந்து சைத்தியப் புருஷனை நோக்கிச் செல்வதாகும்.

*ஆசை இறைவன் மீது எழுந்தால் சுபாவம் தெய்வ சுபாவமாகும்*

## P.81. The force is anterior, not the physical instrument
## சக்தி முந்தையது, கருவி பிந்தையது

தலையிருக்க வால் ஆடலாமா என்று நாம் அடிக்கடி கேட்கிறோம். உலகத்தின் அமைப்பு வால் ஆடுவதாக அமைந்துள்ளது. அதைச் சாதாரண மனிதன் செய்தால் உலகம் முன்னுக்கு வரமுடியாது, ஆனால் கெட்டுப்போகாது. தலைவர்களே செய்தால் உலகம் பின்னுக்குப் போகும். இராமனை நம்பிய தேரைக்குப் போக்கிடமில்லையன்றோ?

எது முதல்? கோழியா? முட்டையா? என்ற கேள்வியை மனிதன் கேட்டுக்கொண்டேயிருக்கிறான். பதில் தெரியவில்லை. அதனால் கேட்பது நிற்கவில்லை. பணம் முதலில் வந்ததா, மனிதன் முதலில் வந்தானா என எவரும் கேட்பதில்லை. கேட்டால், பதில் எளிதில் வரும். ஆனால், நடைமுறையில்

**மனிதனைவிட பணமே முக்கியம் என்று நாம் நினைக்கிறோம்.**

பணத்தைப் பேர் அளவில் சம்பாதித்தவர்கள் பணத்தை மிக முக்கியமாகக் கருதுகிறார்கள். ஆனால் அவர்கள் பணத்தைச் சம்பாதித்தபொழுது, பல இக்கட்டான கட்டங்களில் இந்தக் கேள்வி எழுந்ததுண்டு. மனிதனை முக்கியமாகக் கருதியவர்கள் மட்டுமே ஜெயித்தனர் என்பதும் உண்மை. வாழ்க்கை ஆரம்பத்தில் நண்பர்கள், குடும்பம், கூட்டாளிக்குத் துரோகம் செய்தவர்களில் 10இல் 9 பேர் விருத்திக்கு வருவதில்லை. பணத்தைவிட குடும்பம், கூட்டாளி முக்கியம் என நினைப்பவர்கட்குப் பணம் சம்பாதிக்கும் திறமையுண்டு. பணமே முக்கியம் எனக் கருதியவர்கள் அப்படிச் சம்பாதிப்பதில்லை. பணம் கருவி, விஸ்வாசம் சக்தியாகும்.



உலகம் சக்தியால் இயங்குகிறது. சக்தி தனக்குரிய கருவிகளைத் தயார் செய்து கொள்கிறது என்பது ஆன்மீகம். விஞ்ஞானி தலைகீழாகப் பேசுகிறான். கருவியியங்குவதால் சக்தி உற்பத்தியாகிறது என்பது விஞ்ஞானியின் வாதம். மின்சாரம் உள்ளே வருவதால் மோட்டார் இயங்குகிறது. மோட்டார் இயங்குவதால் மின்சாரம் உற்பத்தியாகிறது என நாம் எப்படிக் கூற முடியும் என ஸ்ரீஅரவிந்தர் கேட்கிறார். இந்த விஷயத்தில் விஞ்ஞானி மாறினால், விஞ்ஞானமும், ஆன்மீகமும் இணையும் வாய்ப்புண்டு.

படிப்பு முடிந்ததன் அடையாளமாக டிகிரி வருகிறது. டிகிரியைக் கையில் கொடுத்தால் படிப்பு வாராது என்ற சிறு விஷயத்தை அன்பர்கள் ஏற்றுக்கொண்டால், அதன்படி நடக்க முற்பட்டால் அருள் அபரிமிதமாகச் செயல்படும்.

அருள் அதிகமாகச் செயல்பட இம்மனமாற்றம் தேவை. உதாரணமாக நாம் வேலை செய்யும் ஆபீஸ் நமக்கு எல்லா வசதிகளையும் செய்யக் கடமைப்பட்டுள்ளது என நினைப்பவருண்டு. அவர் இதை ஏற்றால் ஆபீசுக்காக நாமிருக்கிறோம். நமக்காக ஆபீசில்லை என்று உணர்ந்து, தம் செயல்களை அதற்கேற்ப மாற்றிக் கொண்டால், 30ஆம் நாள் அவர் வருமானம் இருமடங்காகும். இதேபோல் மனம் மாற வேண்டிய இடங்கள் ஏராளமானாலும், இந்த ஒரு மாற்றத்திற்கு இப்பெரும் பலனுண்டு.

கணவன், மனைவி இதே போன்ற மனமாற்றத்தை ஏற்றால் நரகமாக இன்றுள்ள வீடுகள் சுவர்க்கமாக மாறும். நாம் ஏற்க வேண்டியது அன்னையை. அவர் ஏற்படுத்திய ஸ்தாபனத்தை நாம் அன்னையாகக் கருதுவது தவறாகும். அன்னை வேறு, ஸ்தாபனம் வேறு. அன்னையை மட்டும் ஏற்றால் அருள் செயல்படும். ஸ்தாபனம் வேறு, அதன் போக்கு வேறு. நமக்கு அது உதவாது. இந்த வித்தியாசத்தை நாமறிதல் அவசியம்.

❊ ❊ ❊

"பகவானுடைய இதர நூல்கள்''

## Life Divine, Concordance

கம்ப்யூட்டர் செய்யும் வித்தைகள், வினோதங்களை நாம் அறிவோம். **Life Divine** நூலை கம்ப்யூட்டரில் எடுத்து அதன் சொற்களை எண்ணச் சொன்னார்கள். எந்தச் சொல் எத்தனை முறை எந்த எந்தப் பக்கங்களில் வருகிறது என கம்ப்யூட்டர் கணக்கிட்டு சொல்லியது. அதை நூலாக **Life Divine, Concordance**, என வெளியிட்டிருக்கிறார்கள். இதைப் பார்த்தவர்கள் இந்தப் புத்தகம் எப்படிப் பயன்படும் என்று நினைக்கிறார்கள். எனக்குப் பயன்பட்ட முறைகளை எழுதுகிறேன். **Index**இல் கருத்துகளிருக்கும், சொற்களிருக்கா. **Comprehensive preciseness** என்ற சொல் எப்பொழுதோ படித்தது, எங்கு என நினைவில்லை. இது ஒரு முக்கியமான கருத்து. **Precision** என்றால் குறிப்பிட்ட இடத்தின் சிறப்பு, **Comprehensive** எனில் அனைத்தையும் உட்கொள்வது. இரண்டும் முரணான கருத்து.

**முரணான கருத்து இணைந்து முழு முதற்கடவுளாகிறார்**

என்பது ஸ்ரீ அரவிந்தம். கருத்து முக்கியமானது. **Life Divine**இல் படித்தது தெளிவாக நினைவிருக்கிறது. இக்கருத்தை விவாதிக்கும்பொழுது இச்சொற்கள் நினைவுக்கு வந்தன. சொன்னேன். கேட்டவர் அப்பக்கத்தைப் படிக்கப் பிரியப்பட்டார். எனக்குப் பக்கம் நினைவில்லை. எனது குறிப்புகளிலில்லை. **Index**இல் பார்க்க முடியாது. எப்பொழுதாவது படிக்கும்பொழுது அச்சொல் கண்ணில் பட்டால் உண்டு. இப்புத்தகத்தில் பார்த்தால் கிடைக்கும் என ஒருவர் கூறினார். அவரே புத்தகத்தை எடுத்து **comprehensive** என்ற சொல் 40 பக்கங்களில் வருகிறது என்றார். எனவே இந்த 40 பக்கங்களில் தேடினால், கிடைக்காது என்ற சொற்றொடர் கிடைத்துவிடும் என்பது முடியும் என்று தெரிந்தது. மேலும் **preciseness** என்ற சொல்லைப் பார்த்தார். அது ஒரே ஒருமுறை நூலில் வருகிறது. 324ஆம் பக்கத்திலுள்ளது. 324ஆம் பக்கத்தை மட்டும் பார்த்தால் தேடிய சொல் கிடைத்துவிட்டது. இதுவரை இப்படி ஒரு வழியுண்டு என்றறியாத நமக்கு இந்நூல் அளித்த வரம் இது.



கம்ப்யூட்டரில் அக்கரையுள்ளவர்க்கும், **Life Divine**இல் ஆசையுள்ளவர்க்கும் இந்நூல் பெரிதும் பயன்படும். நான் பெற்ற பலன்கள் அதிகம், மேலே கூறியது முக்கியமான பலனாகும். இந்நூல் தரும் சில தகவல்கள்:-

1) 4638 சொற்கள் நூலில் ஒரே ஒரு முறை பயன்பட்டுள்ளது. (அதில் **preciseness** என்பதும் ஒன்று!)

2) ஒரே சொல் 31463 முறை பயன்பட்டுள்ளது.

3) நூலில் 12,032 சொற்கள் பயன்படுகின்றன.

4) நூலின் எல்லாப் பக்கங்களிலும் உள்ள மொத்த சொற்கள் 4,15,238 ஆகும்.

* * *

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

உயர்ந்தது உனக்கு இனிமையானது என்று புரிந்துவிட்டால், இதுவரை நீ ஆர்வமாகத் தேடியவற்றைத் தேடியதுபோல் இன்று உயர்ந்ததைத் தேடினால் உன் மனம் இறைவனை அடையும்.

***ஆர்வம் முழுமையானால் ஆண்டவன் எதிர் கொள்வான்.***

"அன்பர் உரை''

## பாஸிட்டிவ் மனோபாவம் - வாழ்க்கையை என்றும் பசுமையாகவும், ஏறுமுகமாகவும் வைத்திருக்கும்

## நெகட்டிவ் மனோபாவம் - வறட்சியாகவும், இறங்குமுகமாகவும் வைத்திருக்கும்

*(சென்னை ரிஷி இல்லத் தியான மையத்தில் 28.11.99 அன்று திருமதி உஷா ராம்தாஸ் நிகழ்த்திய உரை)*

ராஜா, பிச்சைக்காரன் என இருபாத்திரம் உண்டானால், நாடகத்தைப் பொருத்தவரை அவை நடிப்புதான். இருந்தாலும் எவரும் ராஜாவாக நடிக்கப் பிரியப்படுவார்கள், பிச்சைக்காரனாக இருக்கப் பிரியப்பட மாட்டார்கள்.

பாஸிட்டிவ், நெகட்டிவ் என்பவை இரு பகுதிகளே. இரண்டும் அவசியம் என்றாலும் நம் மனம் பாஸிட்டிவாக இருப்பதையே விரும்புகிறது. பாஸிட்டிவ் வாழ்வைப் பசுமையாகவும், நெகட்டிவ் வறட்சியாகவும் வைத்திருப்பது உண்மை. நம்மைப் பொருத்தவரை நாம் பாஸிட்டிவாக இருக்கப் பிரியப்பட்டால், அதன் மூலம் அன்னை எப்படிச் செயல்படுகிறார் என்று காண்போம்.

ராஜாஜி வேப்பிலை மரத்தைப்பற்றி ஒரு கதை எழுதினார். கருவேப்பிலையை அனைவரும் நாடுகின்றனர், தன்னை அனைவரும் ஒதுக்குகின்றனர் என வேப்பிலை மரம் குறைபட்டு ஆண்டவனை வரம் கேட்டபொழுது, வரம் கிடைத்தது. அதிலிருந்து அனைவரும் வேப்பிலை மரத்தை நாடினர். அதுவரை துளிர்த்து, பூத்து, காய்த்து, பழுத்து குலுங்கிய மரம் வருபவர்கள் தன் இலையைக் கிள்ளுவதைக் கண்டது. இலையாகவே அத்தனைபேரும் எடுத்துப் போவதால் மரம் மொட்டையாகிவிட்டது. காய்க்க, பழுக்க முடியவில்லை. வரம் பலித்த பின்தான் வேப்பிலை மரத்திற்கு தன் முந்தைய செழிப்பே தேவலை எனத் தோன்றியது.



மனித மனத்தின் நிலைகளை தீயசக்தி, தீமை, நெகட்டிவ், பாஸிட்டிவ் எனப் பிரிக்கலாம். மோசமான மனிதன் நெகட்டிவாக இருக்கிறான். அதைவிட மோசம் எனில் அவனிடம் தீமை evil இருக்கும். கடைசி கட்டம் தீய சக்தியாக இருப்பது. அன்னையிடம் வர பாஸிட்டிவாகவும், நன்மையாகவும், தெய்வசக்தி பொருந்தியுமிருப்பது சிறந்தது.

ஆபீசில் நண்பரைப் பார்க்கிறோம். பேசுகிறோம். அவரைப்பற்றி மேலதிகாரி பாராட்டிப் பேசினார் என்பதை அவரிடம் முதலில் நாம் கூறப் பிரியப்படுகிறோம். மேல் அதிகாரி அவரைப் பற்றிக் குறையாகப் பேசியிருந்தால் நாம் அதை அவரிடம் கூறப் பிரியப்படுவதில்லை. நல்ல செய்தியை எடுத்துவரவே நாம் பிரியப்படுகிறோம். கொலைக்குற்றம் செய்தவனை விசாரிக்கிறார்கள். குற்றம் ருசுவாகிறது. ஜட்ஜ் அவனுக்குத் தூக்குத் தண்டனை தரவேண்டும் எனில் "எனக்கேன் இந்த நிலைமை" என்றே ஜட்ஜ் நினைக்கிறார். கொலைத் தண்டனையை தம் கையால் எழுத ஜட்ஜ் பிரியப்படுவதில்லை. தம் கையால் நல்லது செய்யவே எவரும் பிரியப்படுவார்கள். அவர்கள் மனம் நல்லதாக இருக்கும். அன்னை அவர்கள் மூலம் அருளாக செயல்படுவார்கள். அப்படிப்பட்டவர் வாழ்வு தொடர்ந்து ஏறுமுகமாகவும், பசுமையாகவுமிருக்கும்.

ஏன் ஒருவர் பாஸிட்டிவாகவும், அடுத்தவர் நெகட்டிவாகவுமிருக்கிறார். நெகட்டிவானவர் அதற்குமுன் நிலையான தீமையைக் கடந்தவர். பாஸிட்டிவானவர் நெகட்டிவ் நிலையைக் கடந்தவர்.

நெகட்டிவான குணங்களில் சில:

1) காலையில் எழுந்தவுடன் இன்று ஆபீசுக்கு லீவு போட்டுவிட்டு வீட்டிலிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

2) காலேஜுக்குப் போனவுடன் ஏமாந்த பையன் வருகிறான். உடனே அவனை மட்டமாகப் பேசுகிறோம்.

3) புதியதாக T.V. வந்திருக்கிறது. பிரித்துப் பார்க்க ஆசை. பிரித்தால் கெட்டுவிடலாம் என்றாலும் பிரித்துவிடுகிறோம். ரிப்பேராகிறது.

4) எதிர்வீட்டுக்காரர் வருகிறார். மாதக்கடைசி என்பதால் கடன் கேட்பார். என்ன சொல்லி தவிர்க்கலாம் என மனம் நினைக்கின்றது.

5) வழியில் பார்த்த நண்பர் ஜவுளிக்கடை ஆரம்பித்ததாகச் சொன்னவுடன், கடன் கேட்கிறோம்.

6) மேலதிகாரி அடுத்த சீட்காரர் பணம் திருடுவதாகக் கூறியதை அவரிடம் சொல்ல மனம் துடிக்கிறது.

7) ஹைதராபாத் நண்பர் வந்திருக்கிறார். அவரிடம் தெலுங்கர்கள் மக்கு என்று கூறினால் மனம் புண்படுவார். அதனால் புண்படுத்தி வேடிக்கைப் பார்க்கிறோம்.

8) எதிரி வேறு விஷயத்தில் தண்டனை பெற்றவுடன் கைதட்டிச் சிரிப்பது.

9) மேடையில் பேசுபவரை கூட்டம் ஆரவாரமாகப் பாராட்டுகிறது. குறுக்குக்கேள்வி கேட்டால் அவர் திணறுவார். கேட்கிறோம்.

10) நிமிர்ந்து பல்லைப் பார்த்தால், கம்பால் தட்டி உடைக்க மனம் நினைப்பது.

அவற்றிற்கெதிரான பாஸிட்டிவான செயல்கள், எண்ணங்கள்.

1) ½ மணி முன்னால் ஆபீசுக்குப் போனால் அதிக வேலை செய்யலாம் எனப் போவது.

2) கல்லூரியில் எல்லோரும் கேலி செய்யும் மாணவனைக் கண்டபொழுது, அவனிடம் இதமாக, ஆறுதலாகப் பேசுவது.

3) பக்கத்து வீட்டில் T.V. வேலை செய்யவில்லை என்றால், நாம் போய் ரிப்பேர் செய்து தருவது.

4) எதிர்வீட்டுக்காரருக்கு மாதக்கடைசி எனத் தெரியும். அவர் கேட்பதற்கு முன் பணஉதவி அளிக்க முன்வருவது.

5) நண்பன் புதியதாக ஜவுளிக்கடை ஆரம்பித்திருப்பதால் நமக்குத் தெரிந்த பாங்க் மேனேஜரிடம் அவரை அறிமுகப்படுத்தி பணம் பெற்றுத் தர நினைப்பது.

6) மேலதிகாரி அடுத்த சீட்காரர் பணம் திருடுவதாகக் கூறியபொழுது உண்மையை அவரிடம் சொல்லி தவறான எண்ணத்தை அழிப்பது.

7) ஹைதராபாத் நண்பரிடம் தெலுங்கை, பாரதி சுந்தரத்தெலுங்கென்றார் எனக்கூறிச் சந்தோஷப்படுத்துவது.



8) எதிரிக்குப் பரிசு கிடைத்தபொழுது போய்ப்பார்த்துப் பாராட்டுவது.

9) மேடையில் பேசுபவரை கூட்டம் கேலி செய்யும்பொழுது கூட்டத்தைக் கட்டுப்படுத்தி பேசுபவரை ஊக்குவிப்பது.

10) நிமிர்ந்து பல்லைப் பார்த்தவுடன் அதன் மீதுள்ள தூசைத் துடைப்பது.

கட்சிக்காரர் வக்கீலிடம் வந்து பத்திரம் எழுதும்படிக் கேட்டார். நாட்டில் ரூ.50/- பீஸ் வழங்கும் பொழுது வக்கீல் 800/-ரூபாய் கேட்டார். 400ரூபாய்க்கு ஒத்துக்கொண்டார். பத்திரம் எழுத யாரும் வக்கீலிடம் வருவதில்லை. பெட்டிஷன் ரைட்டரிடம் போவார்கள். அவர் 20ரூபாய் வாங்கிக்கொண்டு எழுதிக் கொடுக்கும் காலம். பெரிய சொத்து என்பதாலும், பத்திரத்தை இங்கிலீஷில் எழுதவேண்டும், பின்னால் தப்பு வரக்கூடாது என்பதால், நிலம் வாங்குபவர் பெரிய வக்கீலை அணுகி பத்திரம் எழுதச் சொன்னார். இதுவே அந்த வக்கீல் எழுதும் முதல் கிரயப்பத்திரம். இந்த வக்கீல் அந்நிலத்தை விற்கும் பார்ட்டிகளில் ஒருவருக்கும் வக்கீல். அந்தப் பார்ட்டிக்கு உயில் உள்ளது. 400ரூபாய் பீஸும் கேட்டுவிட்டு, பத்திரம் எழுதும்பொழுது அந்த உயிலைக் கட்டுப்படுத்தி எழுதும்படியான சொல்லைப் பயன்படுத்தினார் வக்கீல். இது நெகட்டிவான குணம். வாங்குபவர் விவரம் தெரிந்தவர். பத்திரத்தைப் பார்த்தவுடன் அந்த வார்த்தையைக் கண்டார். வக்கீல் விஷயம் புரிந்துவிட்டது. வக்கீலை விளக்கம் கேட்டார். வக்கீலால் பதில் சொல்ல முடியவில்லை.

கட்சிக்காரர் செல்வாக்குள்ளவர். வேறு வக்கீலிடம் போய்விட்டார். இந்த வக்கீல் கட்சிக்காரர் பத்திரத்தை எழுதிக் கொடுத்தார். “பீஸ் வேண்டாம் நீங்கள் பொதுச் சேவை செய்பவர் அல்லவா?” என்றார். கட்சிக்காரருக்கு உள்ளூர் நிலவரம் தெரியும். 200ரூபாய் பீஸ் கொடுத்துவிட்டு “உங்களை உள்ளூர் பாங்கில் வக்கீலாக நியமிக்கச் சொல்லியிருக்கிறேன்” என்றார். இவர் நியமனம் பெற்றார். குதர்க்கமான வக்கீல் செய்துவந்த வேலை என கட்சிக்காரருக்குத் தெரியாது. குதர்க்கம் நெகட்டிவ். 50ரூபாய்க்குப் பதிலாக 800ரூபாய் கேட்பதும், துரோகமனப்பான்மையும், இருந்த பாங்க் வக்கீல் பதவிக்கு ஆபத்தைக் கொண்டு வந்தது. பொதுச்

சேவை செய்பவருக்கு உதவி செய்யும் பாஸிட்டிவ் மனப்பான்மை 4 மடங்கு பீஸும், புதிய வேலையையும் கொண்டு வருகிறது.

கம்பனியை மூடப்போகிறார்கள் என மானேஜர் கேள்விப்பட்டார். மானேஜர் 25,000 சம்பளம் வாங்குபவர். கம்பனியை மூடுவது மானேஜருக்குப் பொறுக்கவில்லை. தனக்குத் தெரிந்தவர்களை கலந்து ஆலோசித்தார். 50,000ரூபாய் கொடுத்தால் மூடுவதைத் தடுக்கலாம் என ஒருவர் கூறினார். மானேஜருக்கும் கம்பனி மீது விஸ்வாசம். முதலாளிக்குத் தெரியாமல் தாமே 50,000ரூபாய் கொடுத்து தன்னாலானதை முயன்று பார்த்தார். கம்பனியை மூடவில்லை. மானேஜர் தாம் செலவு செய்ததைப் பொருட்படுத்தவில்லை. சந்தோஷப்பட்டார். சம்பளம் 5000ரூபாய் உயர்ந்தது. செய்த செலவு 10 மாதத்தில் வந்துவிட்டது.

அடுத்த ஆண்டு நிலைமை மாறியது. புதிய ஏற்பாட்டின்படி மானேஜருக்கு இலாபத்தில் சம்பளம் போக பங்குண்டு என்று முடிவு செய்தார்கள். முதல் மாதம் 1 லட்சம் அதுபோல் வந்தது.

எந்த மானேஜரும் தான் செலவு செய்து கம்பனியைக் காப்பாற்ற முன்வருவதில்லை. இதைவிடப் பாஸிட்டிவான குணமில்லை.

பாஸிட்டிவான குணத்திற்கு வாழ்வும், அன்னையும் பரிசு கொடுக்கும்பொழுது அது பரிசாக இருப்பதில்லை. பரிவான ஆதரவாக அமைகிறது. இந்த கம்பனிக்கு வாடிக்கைக்காரர் ஒருவர் கம்பனியில் $1/3$ ஷேர் வாங்கியிருந்தார். மானேஜருடைய பொறுப் புணர்ச்சியைப் பாராட்டி தன் ஷேரில் ஒரு பாகத்தை மானேஜருக்கு இனாமாகக் கொடுத்தார். அதன் மதிப்பு 10 இலட்சம். கம்பனி சிறப்பாக இருந்தால் அதன் மதிப்பு இருமடங்கு. இதே வாடிக்கைக்காரர் அதே அளவு பரிசை அடுத்த ஒரு மானேஜருக்கும் கொடுத்தார்.

> **அன்னையின் ராஜ்யத்தில் நடப்பவை இதுவரை உலகத்தில் நடக்காததாகவும் இருப்பதுண்டு.**

❊ ❊ ❊



## ‘Agenda’

## Vol III P. 230 While reading the history books at 12, Mother could know what had happened during those times

### 12ஆம் வயதில் அன்னை படித்த சரித்திரப் புத்தகங்களை அன்னை சூட்சுமவாயிலாகக் கொண்டு அன்று நடந்தவற்றை நிதர்சனமாகக் ‘கண்டார்’

புதுவை வந்து ஸ்ரீ அரவிந்தரைச் சந்திக்குமுன் அன்னை சத்தியஜீவனைக் கண்டார். ஆப்பிரிக்காவிலிருக்கும்பொழுது, உடலைவிட்டுப் பிரிந்து பாரிஸ் வந்து ரயில் ஏறி இறங்கினார், மாலை தொடுத்தார், பென்சிலை எடுத்து எழுதினார் என்பவை வாசகர் அறிவதே.

> **"புதுவை வருமுன் அன்னை பௌத்தமத யோகத்தையும், கீதையினுடைய யோகத்தையும் சிறப்பாக அறிவார்’’ என்று பகவான் கூறியுள்ளார்.**
>
> **"சத்தியஜீவியத்தினுள் அன்னை நேரடியாக நுழைந்தார். நான் கொல்லைப்புறமாக நுழைந்தேன்’’ எனவும் பகவான் கூறியுள்ளார்.**

“பூமியின் சரித்திரம் சூட்சும உலகில் ஓரிடத்தில் உள்ளது” என்று அன்னை கூறுகிறார். இதுவரை யோகத்தை மோட்சத்திற்காகச் செய்தனர். எனினும் சிருஷ்டியின் சூட்சுமங்கள், இரகஸ்யங்களை யோகிகள் அறிவார்கள். அப்படி யோகிகள் இதுவரை அறியாத சூட்சுமங்களே இல்லை எனலாம். கல்லூரியில் படிக்க மாணவன் சென்னை செல்கிறான். அவன் வேலை படிப்பு, குறிக்கோள் பட்டம். ஆனால் சென்னையிலுள்ள ஏராளமான செய்திகள் அவன் காதில் விழுகின்றன. பெரிய ஆபீசர்கள், பணக்காரர்கள், சினிமா நடிகர்கள், அரசியல்வாதிகள், நகரத்தின் முக்கிய செய்திகள், இரகஸ்யங்கள்,

மூலைமுடுக்குகள் ஆகியவற்றை மாணவர்கள் அறிவதுண்டு. சர்க்கார் நகரத்தைப்பற்றிய **monograph** ஆய்வு ஒன்றை எழுதமுயன்று அதனுள் அத்தனை விஷயங்களையும் சேகரித்தால், 5,6 வருஷம் படிக்கப்போன மாணவர்கள் காதில் விழாத செய்திகள் அதனுள் எத்தனை இருக்கும்?

ஸ்ரீ அரவிந்தர் வாழ்வனைத்தும் யோகம் என்பதால், வாழ்வு, யோகம், சிருஷ்டி ஆகியவற்றில் எல்லா விவரங்களையும் சட்டப்படி அறிய முயன்றார். அவற்றை அறியாமல் பூரண யோகம் பூர்த்தியாகாது. அப்படி அவரறிந்த புதுமைகளில் எதுவும் முன்னோர் அறியாததில்லை. அறிவது வேறு. அவற்றைப் பெறுவது வேறு.

பிறர் மனத்து எண்ணங்களை அறியமுடியும் என்று தெரிவதால் அதை அறியமுடியாதன்றோ? ஜீவன் மலர்ந்தால், அதாவது ஆன்மா மனத்திலுதித்தால், உலகம் தன்னை யோகிக்கு அறிவிக்கும். அப்படி பிறப்பதே மேதா விலாசம் **genius**. ஐன்ஸ்டீனுக்கு $E=Mc^2$ என்ற சூத்திரம் தெரிந்தது அதுபோன்ற முறையால்தான்.

விவேகானந்தர் ஒரு புத்தகத்தை எடுத்து முதல் வரியைப் படித்தால் அதன் எல்லா பக்கங்களிலுமுள்ள எல்லா விஷயங்களும் க்ஷணத்தில் அவர் மனதில் நுழையும். ஸ்ரீ அரவிந்தருக்கு அது போல் அவர் படித்த புத்தகங்கள் வரி, வரியாய், பக்கம், பக்கமாய் மனதில் பதிந்ததுண்டு. சரித்திரப் புத்தகங்களைப் படிக்கும்பொழுது அன்னையின் கண்முன் அந்நிகழ்ச்சிகள் பவனி வரும். அது அன்னை பெற்ற ஆன்மீகப்பேறு.

* நாடி ஜோஸ்யம் அது போல் எழுதப்பட்டதாகும்.
* ஆபத்து நேரத்தில் அபயக்குரல் அதுபோல் பிறர் காதில் விழும்.
* பூர்வஜென்ம ஞானம் புலப்படும் முறைகளைச் சேர்ந்தது இத்திறன்.
* அன்பர் கண்முன் வெளியூரிலுள்ளவர் செய்வது “தெரிவதுண்டு”.

❊ ❊ ❊





## P. 9. But knew not why it was there not whence it came

## ஏன் அது அங்கிருக்கிறது, எப்படி அங்கு வந்தது எனத் தெரியவில்லை

மேல் லோக ஜோதியைப் புவியின் இருளாக மாற்றிய லீலை மலர்ந்து மீண்டும் ஜோதி வெளிவருவதை அனுபவிக்க இறைவன் முயலும் நேரம் அது. ஒளிப்பொறி தன்னை உணராத நேரம். உணரவைப்பது அருள். அருளின் தீண்டுதலை அறியமுடியாத நிலை. அதைச் சாதிக்க ஜன்மமெடுத்தவள் சாவித்திரி. அவள் சூர்யபுத்ரி. இருளில் மறைந்த ஆத்மா சத்யவான். சத்யவானை இருளிலிருந்து மீட்க சாவித்திரி அவதரிக்கிறாள்.

அவள் வேதனை பெரியது. அவள் வேதனையே வாளாக மாறி அவளை வதைக்கிறது. மனித வாழ்வு இருளால் நிறைந்தது. மனிதன், சத்தியவான்போல், அவ்விருளில் மூழ்கியுள்ளான். அன்னை அருள் அவனைக் காப்பாற்ற முனைகிறது. அன்பன் அன்னை அருள் ஏற்று வேதனையான வாழ்வை ஆனந்தமாக மாற்ற முன்வந்தால், சாவித்திரி உலகில் அவதரித்த காரியம் பூர்த்தியாகும். உலகவாழ்வில் பொய்க்கு வலிமையுண்டு. பொய்யைப் பயன்படுத்தி பலன் பெறுவது இருள். பொய்யை வாழ்விலிருந்து விலக்கி அருளை நாடினால், அன்னையின் கை வலுப்படும்.

பொய் சொல்ல மறுப்பதும், பிறர் குறை கூற முடியாத நிலையும், தந்திரயுக்தியால் பலனை நாடவில்லை என உறுதி பூண்பதும், அருளை ஏற்கும் பாங்காகும். வேலைக்கு விண்ணப்பம் செய்தால், லஞ்சம், சிபார்சை நாடமுடியாதவன், அருளை மட்டும் நம்புபவன் அன்பன். அருளால் மட்டும் வேலை பெறுபவன் அன்னை உலகில் வளர உதவுபவன். வியாதி வந்தபொழுது அருளால் மட்டும் குணத்தை நாட மனம் விழையுமானால், அம்மனம் அன்னைக்குரியது.

அன்னையின் அருள் வித்து பூவுலகில் பூத்தது என்றாகும். அதுவே சாவித்திரியின் பாரம், வேதனை.

* தன் வேதனையை வாளாக மாற்றினாள்
* தனிமையை நாடும் மனம் உலகத்தைத் தழுவும் இதயம்
* தனிமையான தெய்வத்தின் கடமையைப் பகிர்ந்தாள்
* பாரமான நெஞ்சை வேதனைக்குள்ளாக்கவில்லை
* பூமாதேவியின் உணர்வற்ற தூக்கத்தின் மடி
* மறதியில் மறைந்த ஜடம்
* மனத்தின் எல்லையில் தன்னை மறந்து இழந்தாள்
* கற்போல, நட்சத்திரம்போல கோணலான அமைதி
* இரு லோகப் பிளவின் இடைப்பட்ட அமைதி
* கவலை எட்டமுடியாத, பொறுப்பு தீண்ட முடியாத நிலை
* நிழல் போன்ற நினைவின் அசைவு
* பெருமூச்சிட்டு நெஞ்சைத் தீண்டினாள்
* வலியின் சுவடு வலிய வந்து தீண்டியது
* ஆழ்ந்து அமைதியுற்று நெடுநாளாகப் பழகியது
* மனத்தைத் தூண்டும் சக்தி விலகியது
* வாழ்வின் சேவகன் விருப்பமின்றி நின்றான்

❋ ❋ ❋



# அன்பர் அனுபவம்

**என் வாழ்க்கையில் அன்னையின் அருளாட்சி**

நான் அன்னையை சுமார் 10 வருடமாக அறிவேன். நான் முதன்முதலில் அமுதசுரபி என்ற பத்திரிகையில் ஸ்ரீ அன்னையைப் பற்றியும் ஸ்ரீ அரவிந்தரைப்பற்றியும் திரு.கர்மயோகி அவர்கள் எழுதியிருந்த கட்டுரை மூலம் தெரிந்துகொண்டேன். ஸ்ரீ அன்னையின் அருளால் என் வாழ்க்கையில் மன நிம்மதியும் சந்தோசத்தையும் அடைந்தேன். என்னுடைய மனைவியும், மகனும் சேர்ந்து ஸ்ரீ அன்னையை வழிபட வேண்டும் என்று பிரார்த்தனை செய்தேன். அவர்களும் அன்னை பக்தர்கள் ஆனார்கள்.

நான் ஒரு சமயம் பாண்டிச்சேரி வந்து ஸ்ரீ அன்னையைத் தரிசனம் செய்துவிட்டு வரும்போது நாங்கள் வரும் பஸ்ஸில் ராணிப்பேட்டை அன்னை அன்பர்களும் வந்திருந்தார்கள். எங்களைப் பற்றியும் அவர்களுக்குத் தெரியாது. அவர்களை பற்றியும் எங்களுக்குத் தெரியாது. நாங்கள் பக்கத்துச் சீட்டில் உட்கார்ந்திருந்தோம். அவர்கள் எங்களை விசாரித்தார்கள். நாங்கள் பாண்டியில் இருக்கும் ஸ்ரீ அன்னையின் சமாதியைத் தரிசனம் செய்துவிட்டு வருகிறோம் என்று கூறினோம். அவர்களும் மகிழ்ச்சி அடைந்தார்கள். அப்போது அவர்கள், என்னுடைய வீட்டில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணிக்குத் தியானம் நடைபெறுகிறது. அதில் நீங்களும் கலந்து கொள்ளுங்கள் என்று கூறினார்கள். இதன் பிறகு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வேலூரில் இருந்து ராணிப்பேட்டை பெல் டவுன்ஷிப்பில் இருக்கும் அன்பர் வீட்டிற்குச் சென்று வந்தேன். சில ஞாயிற்றுக்கிழமை தவிர்க்க முடியாத காரணத்தால் போக முடியாமல் போகும்.

தியானம் என்றால் என்ன என்று அப்போது தெரியாது. தியானம் செய்வதுபற்றி நான் எல்லோரிடமும் கேட்டுச் சிறிதளவு அறிந்தேன்.

அன்பர் வீட்டிற்குப் போகும்போது எல்லாம் எனக்கு மகிழ்ச்சியாகவும் சந்தோஷஷமாகவும் இருக்கும். எப்போது ஞாயிற்றுக்கிழமை வரும் என்று காத்திருப்பேன். ஏனென்றால் அங்கு ஸ்ரீ அன்னையின் பக்தர் களைப் பார்க்கும்போது மகிழ்ச்சியாகவும், சந்தோஷமாகவுமிருக்கும்.

நான் **private** கம்பெனியில் **Accountant**-ஆகப் பணி புரிந்து வருகிறேன். பாண்டிச்சேரி சொசைட்டிக்கு என்னுடைய வாழ்க்கை நிலையைப் பற்றி **Dec** '85-இல் எழுதினேன். அங்கிருந்து 04.12.85-இல் எனக்குப் பதில் லெட்டர் வந்தது. அதில் அமுதசுரபியில் 1985-ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரை வெளியான மூன்று கட்டுரைகளான நம்பிக்கை, பக்தி, தெய்வசிந்தனை ஆகிய கட்டுரையில் கண்டுள்ளபடி வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் சகல செல்வங்களும், நலன்களும் தடையில்லாமல் பெருகும் என்று பதில் இருந்தது. இந்த மூன்று கட்டுரைகளையும் படித்து அதன்படி நடக்க ஆரம்பித்தேன். இப்போது அன்னையின் ஆசியால் முன்பை விட அதிக முன்னேற்றம் அடைந்திருக்கிறேன்.

ஒரு சமயம் **Feb** '88-இல் என்னுடைய பெரியம்மா பேரன் காணாமல் போய்விட்டான். நாங்கள் எங்குத் தேடியும் பையன் கிடைக்கவில்லை. அன்று என்னுடைய தாயார் சொசைட்டிக்கு எழுதி கேட்கச் சொன்னார்கள். பிறகு நான் பையன் காணாமல் போய்விட்டான் என்பதை லெட்டரில் எழுதி கேட்டிருந்தேன். அதற்கு எனக்கு 23.02.88-இல் சொசைட்டியிலிருந்து பதில் வந்தது. அந்த லெட்டரில் தாய் தந்தையர் அன்னையிடம் தீவிரமாகப் பிரார்த்தனை செய்தால் பிள்ளை தானே திரும்பி வருவான் என்று எழுதியிருந்தார். என்ன ஆச்சரியம்! லெட்டர் வந்த இரண்டு நாளில் பையன் திரும்பி வந்துவிட்டான். ஸ்ரீ அன்னைக்கு நன்றிக் காணிக்கையாகச் சிறுதொகையொன்றை ஆசிரமத்திற்கு அனுப்பி வைத்தேன்.

ஒரு சமயம் நான் வேலை செய்யுமிடத்தில் ஒரு பைல் காணாமல் போய்விட்டது. அதற்கு அவர்கள், நான்தான் எடுத்தேன் என்று என்மேல் பழி சுமத்தினார்கள். நான் பாண்டிக்கு ஜனவரி மாதம்



87-ஆம் வருடம் எழுதிக் கேட்டிருந்தேன். அதற்கு அவர், காணாமல் போன பைல் கிடைத்துவிடும். அன்னை அருளில் முழு நம்பிக்கை வைத்து தினமும் அது திரும்பவும் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்து ஒரு காணிக்கையை அனுப்பி வைக்குமாறு எழுதியிருந்தார். ஒரு நாள் அந்த நிறுவனத்தில் நான் கணக்கு எழுதும்போது இடத்தைச் சுத்தம் செய்து கொண்டிருந்தார்கள். அப்போது காணாமல் போன பைல் மேல் அலமாரியில் இருப்பதாக அங்கு வேலை செய்யும் பையன் கூறினான். எனக்கு உடம்பு சிலிர்த்துவிட்டது. ஸ்ரீ அன்னைக்கு அந்த இடத்திலேயே நன்றி கூறினேன்.

நான் என்னுடைய மனைவி, மகன் மூவரும் ஒவ்வொரு தரிசன நாளுக்கும் பாண்டிச்சேரி சென்று ஸ்ரீ அன்னையின் சமாதியைத் தரிசனம் செய்துவிட்டு ஆசீர்வாதம் பெற்று வருவோம்.

என்னுடைய தாயார் வினாயகர், முருகர், சத்யநாராயணன் முதலிய கடவுள்களை வணங்குவார். சித்ரா பௌர்ணமிக்கு சத்யநாராயண பூஜையை ரொம்ப விமரிசையாக என்னுடைய தாயார் கொண்டாடுவார்.

நான் ஸ்ரீ அன்னையின் படத்தை பிரேம் போட்டு மாட்டி வைத்து தினமும் ஊதுவத்தி காண்பித்து வந்தேன். இதற்கு என்னுடைய தாயாரிடம் இருந்து கொஞ்சம் எதிர்ப்பு வந்தது. சில நாள் கழித்து அமைதியாகி விட்டார்கள். பிறகு, அவர்களும் நான் அன்னையின் முன் அமர்ந்து தியானம் செய்யும் போது தானும் என் பக்கத்தில் வந்து அமர்ந்து அமைதியாக ஸ்ரீ அன்னையை வணங்குவார்கள். ஒரு நாள் அன்பர் ஒருவர் இன்னொரு அன்பர் கல்யாணத்திற்காக வேலூர் வந்திருந்தார். நானும் அந்தக் கல்யாணத்திற்குச் சென்று இருந்தேன். அங்கு அந்த அன்பரைச் சந்தித்தேன். பிறகு என்னுடைய வீட்டிற்கு வர வேண்டும் என்று கூறி அழைத்து வந்தேன். என்னுடைய தாயாருக்கு அவர்களை மிகவும் பிடித்திருந்தது. அன்றிலிருந்து என்னுடைய தாயார் ஸ்ரீ அன்னையை இன்னும் அதிகமாக வணங்க ஆரம்பித்தார்கள்.

என்னுடைய தாயார் 14.12.92-இல் காலமாகி விட்டார்கள். எனக்கு மிகவும் கவலையாக இருந்தது. மனதில் நிம்மதி இல்லை. பிறகு ஜனவரி 93-இல் பாண்டி வந்து ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தர் சமாதியைத் தரிசனம் செய்துவிட்டு ஆசீர்வாதம் பெற்று அன்னை அன்பர் வீட்டிற்கும் சென்றோம். அவரிடமும் எங்களுக்கு மனதில் நிம்மதியும் சந்தோஷமும் இல்லை என்று கூறினோம். அதற்கு அவர், ஒவ்வொரு மாதம் 1-ஆம் தேதி பாண்டிச்சேரி வந்து சமாதி தரிசனம் செய்யுங்கள் என்று கூறினார். அதன் பிறகு 01.03.93 முதல் இன்று வரை சென்று வருகிறேன். இதனால் மனதில் மகிழ்ச்சியும் ஆர்வமும் உண்டாகிறது.

ஒரு சமயம் ஒரு அன்பர் ராணிபேட்டை தியான மையத்திற்கு வந்திருந்தார்கள். வேலூரில் இருக்கும் என் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போக வந்திருந்தேன். அவரும் வருவதாக ஒப்புக் கொண்டார். நான் என்னுடைய மனதில் கார் அல்லது ஆட்டோ கிடைத்தால் அதில் அமர்த்தி அழைத்து செல்லலாம் என்று இருந்தேன். ஆனால் அங்கு எதுவும் கிடைக்கவில்லை. நானும் அவரும் பஸ்சுக்காக காத்திருந்தோம். ஆனால் என்ன அதிசயம் பாருங்கள்! திடீர் என்று ஒரு வேன் எங்கள் அருகில் வந்து நின்றது. அதில் உள்ள டிரைவர் எங்களைப் பார்த்து வேன் வேலூர்வரை போகிறது. வருகிறீர்களா? என்று கேட்டார். நாங்களும் வேனில் ஏறி வேலூர் வந்து சேர்ந்தோம்.

நான் தினந்தோறும் காலை 6.30 மணியிலிருந்து 7.00 மணி வரை ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தரைப் பற்றி நினைத்து தியானம் செய்வேன். ஒவ்வொரு மாதமும் ஒருநாள் நானும் என் மனைவியும் காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தரைப் பற்றி நினைத்துத் தியானம் செய்வோம். அந்தச் சமயம் காலை 6.00 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரை எந்தவிதமான ஆகாரமோ தண்ணீரோ எதுவும் அருந்தாமல் மௌன விரதம் இருப்போம். மாலை 6 மணிக்குப் பிறகுதான் உணவு அருந்துவோம். 9.2.96 முதல் 11.2.96 வரை காலை 6.00 மணி முதல் மாலை 6.00



மணி வரை எதுவும் சாப்பிடாமல் மௌன விரதம் இருந்தோம். தினமும் எங்கள் வீட்டில் காலையில் 6 மணிக்கு விஜய் டிவியில் வரும் ஸ்ரீ அன்னையின் பாட்டை கேட்போம். இப்பொழுது 3 மாதமாக காலை 6.00 மணி முதல் 7.00 மணி வரை கரண்ட் கிடையாது. என் மனதில் இந்த மூன்று நாட்களிலும் டிவியில் வரும் அன்னையை தரிசனம் பார்க்க வேண்டும் என்று நினைத்தேன். பிறகு இந்த 9-ஆம் தேதியிலிருந்து 11-ஆம் தேதி வரையிலான இந்த மூன்று நாட்களிலும் முழுவதும் கரண்ட் கட் இல்லை. எனக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. இந்த மூன்று நாட்களுக்கு பிறகு வழக்கம்போல் காலை 6.00 மணி முதல் கரண்ட் கட் ஆகி விட்டது. இதனால் ஸ்ரீ அன்னை என்னுடைய விருப்பத்தை அறிந்து நிறைவேற்றினார் என்று புரிந்து கொண்டேன். நாங்கள் அன்னை பக்தர்களாகிய பிறகு எங்கள் வாழ்க்கையில் அந்த அளவிற்கு நல்ல சுமுகமும் சந்தோஷமும் நிலவுகிறது.

C. ஜெயபால், வேலூர்

* * *

### என் வாழ்க்கையில் அன்னை அருளின் செயல்பாடுகள்

முதலில் என் கணவர் அமுதசுரபி புத்தகத்தில் அன்னையைப் பற்றிப் படித்துவிட்டு என்னிடம் வந்து கூறினார். நான் அப்பொழுது அன்னையைப் பற்றி ஓரளவுதான் தெரிந்து கொண்டேன். என்னுடைய மகன் சின்ன வயதில் எப்பொழுது பார்த்தாலும் அழுது கொண்டு இருப்பான். இதற்காக வேண்டி, பாண்டி சென்று என் கணவரை வேண்டிக்கொண்டு வருமாறு கூறினேன். அவரும் பாண்டி சென்று ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தர் சமாதியைத் தரிசனம் செய்துவிட்டு என் மகனுக்காக வேண்டி வந்தார். என்ன அதிசயம் பாருங்கள்! அன்றுமுதல் என் மகன் அழுகையை விட்டுவிட்டான். மேலும் எங்கள் குடும்பத்தில் சந்தோஷமும் நிம்மதியும் ஏற்பட்டன. பிறகு ஒவ்வொரு தரிசன நாளுக்கும் சென்று ஸ்ரீ அன்னையை வழிபட்டு வந்தோம்.

என்னுடைய மகன் நான்காம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது **final exam** வந்ததில் அவன் அதில் தவறிவிட்டான். நான் அன்னையிடம் வந்து முறையிட்டேன். பிறகு இரண்டு நாள் கழித்து என்னுடைய மகனுக்கும் வேறு சில பிள்ளைகளுக்கு மட்டும் **re-test** வைத்தார்கள். அதில் என்னுடைய மகன் தேறிவிட்டான் என்று பதில் வந்தது. நானும், என் கணவரும், மகனும் ஸ்ரீ அன்னைக்கு நன்றி செலுத்தினோம்.

இன்னொரு சமயம் என்னுடைய மகன் விஜய்க்கு 11-ஆம் ஆண்டு பிறந்தநாள். அன்று ஆசிரமம் வரவேண்டும் என்று நானும் என் மகனும் விரும்பினோம். ஆனால் சில தவிர்க்க முடியாத காரணங்களால் ஆசிரமம் வரமுடியவில்லை. நாங்கள் அன்னையிடம் வேண்டினோம். நாங்கள் ஒவ்வொரு மாதமும் காணிக்கையை என் கணவர் மூலம் 1-ஆம் தேதி அன்று செலுத்திவிட்டு வருவோம். ஆசிரமத்திலிருந்து என் கணவர் பெயருக்குத்தான் பிரசாத பாக்கெட் வரும். ஆனால் என் மகன் பிறந்தநாளுக்கு என் மகனுடைய பெயருக்கு வந்தது. என்ன அதிசயம்! ஸ்ரீ அன்னையின் ஆசியும் ஸ்ரீ அரவிந்தர் ஆசியும் எங்கள் வீடு தேடி வந்தது நாங்கள் மறக்க முடியாத சம்பவம்.

என்னுடைய நெருங்கிய தோழியின் மகளுக்கு உடல் நிலை சரியில்லை. ஆபரேஷன் செய்தால் தான் குணமாகும் என்று **C.M.C.** ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் கூறிவிட்டார்கள். நான் அன்று என் தோழியின் வீட்டிற்குச் சென்று இருந்தேன். என்னுடைய தோழி மிகவும் கவலையாக இருந்தாள். அவள் மகளைப் பற்றி என்னிடம் கூறினாள். தோழியின் கணவரும் இவ்விஷயமாக என்னிடம் கவலை தெரிவித்தார். நான் 'அதற்கு கவலைப்படவேண்டாம்' என்று சொல்லி அன்னையின் டாலரைக் கொடுத்து கழுத்தில் மாட்டிக் கொள்ளும்படிச் சொல்லிவிட்டு ஸ்ரீ அன்னைக்காக, காணிக்கையும் அனுப்புமாறு கூறி வந்தேன். என்னுடைய வீட்டிற்கு என் தோழியையும் அவளுடைய மகளையும் அழைத்து வந்து மூன்று நாள் தியானம் பண்ணச் சொன்னேன். என்னுடைய தோழியும் மகளும் வந்து



ஸ்ரீ அன்னையிடம் அப்பிரார்த்தனையைச் செய்தார்கள். ஒருவாரம் கழித்து தோழியின் மகளை டாக்டரிடம் காண்பித்தார்கள். அவர் குழந்தைக்கு ஆபரேஷன் தேவை இல்லை என்றும் இது மாத்திரையின் மூலமே சரியாகிவிடும் என்றும் கூறிவிட்டார். நோய் குணமாகி விட்டது. என் தோழியின் குடும்பமே ஆசிரமத்திற்குச் சென்று ஸ்ரீ அன்னையின் சமாதியில் நன்றி செலுத்தினார்கள்.

ஒரு சமயம் என்னுடைய தங்கை வேலூர் வந்துவிட்டு மீண்டும் அவள் வீட்டிற்குத் தனியாகவே சென்றாள். அவளுடைய வீடு திருவள்ளூர் பக்கத்தில் ஒரு கிராமத்தில் இருந்தது. பஸ்ஸில் இருந்து இறங்கி 3 கிலோ மீட்டர் நடந்து செல்ல வேண்டும். அன்று நிறைய மழை வேறு பெய்துகொண்டிருந்தது. கரண்டும் இல்லை. ஒரே இருட்டாக இருந்தது. வழித் துணைக்கு யாராவது வருவார்களா என்று பார்த்திருந்தாள். அப்போது நான் கொடுத்த அன்னையின் படம் கையில் இருந்தது. அந்தப் படத்தை பார்த்து "அன்னையே நீ தான் வழித் துணைக்கு வர வேண்டும்'' என்று அங்கேயே பிரார்த்தனை செய்தாள். அப்போது அந்த வழியாகத் தூரத்து உறவினர்கள் மாட்டு வண்டியில் வந்து கொண்டு இருந்தார்கள். அவர்கள் அந்த வழியாக வரவேண்டிய அவசியமே இல்லை. அவர்கள் இவளிடம் மாட்டு வண்டியில் ஏறிக் கொள்ளுங்கள் என்று கூறி அவள் வீட்டிற்கு அழைத்துச் சென்று விட்டார்கள். அன்னையே தனக்கு வழித் துணைக்கு வந்தார் என்று அவள் மிகவும் சந்தோஷம் அடைந்தாள்.

நாங்கள் 29.02.96-ஆம் தேதி ஆசிரமம் சென்று ஸ்ரீ அன்னையையும் ஸ்ரீ அரவிந்தரையும் தரிசனம் செய்ய இருந்தோம். ஆனால் என்னுடைய மகனுக்கு **monthly test** இருப்பதாகத் திடீர் என்று கூறினான். நாங்கள் எப்படிச் சென்று ஆசிரமத் தரிசனம் செய்வோம் என்று நினைத்தோம். கணவர் மட்டும் முதல் நாள் இரவு 11.00 மணிக்கு வேலூரிலிருந்து புறப்பட்டுச் சென்று விட்டார். மறுநாள் எங்கள் உறவினர்கள் காரில் செல்வதாகக் கூறினார்கள். "நீங்களும் வருகிறீர்களா?" என்றும் அழைத்தார்கள். நான் செய்வது

ஒன்றும் புரியாமல் இருந்தேன். “அன்னை அழைக்கிறார், அன்னை விட்டவழி” என்று நினைத்து நானும், என் மகனும் உறவினர்கள் மூலம் ஆசிரமம் வந்து அடைந்தோம். எனக்கு மகிழ்ச்சியாகவும் சந்தோஷமாகவும் இருந்தது. அங்கு என் கணவரும் நானும் மகனும் ஸ்ரீ அரவிந்தர் அறையையும் ஸ்ரீ அன்னையின் அறையையும் பார்த்து தரிசனம் செய்து நிம்மதியாக வீடு வந்து சேர்ந்தோம். அடுத்த நான் என்னுடைய மகன் பள்ளிக்குச் சென்றான். முதல் நாள் நடக்க இருந்த டெஸ்ட் நடக்கவில்லை என்றும் அவன் பள்ளிக்குச் சென்ற மறுநாள் தான் டெஸ்ட் நடக்க போவதாக ஆசிரியர் சொல்லி எழுதச் சொன்னாராம்.

என்னுடைய மகனுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. அங்கேயே ஸ்ரீ அன்னைக்கு நன்றி செலுத்தினான். இப்படி எங்களுடைய குடும்பத்தில் ஸ்ரீ அன்னை அருளால் மன அமைதியும் சந்தோஷமும் நிறைந்துள்ளது.

J. மாலா ஜெயபால், வேலூர்

❋ ❋ ❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

எதையும் நினைக்காமல் நம்முள் இருக்கும் நம்பிக்கையை பூமாதேவி ஏற்றுக் கொள்கிறாள். தெளிவுள்ள நம்பிக்கைக்கு வாழ்வு பரிசளிக்கிறது.

**ஆன்மீக நம்பிக்கைக்கு அதுவே பரிசு.**





# அதிசயங்கள் அன்றாட நிகழ்ச்சிகளாகின்றன

S. அன்னபூரணி

தெய்வீக மணம் கமழும் அன்னை தியானக் கூடல். தலைவர் எழுந்து மைக்கில் பேசினார். “இங்குக் குழுமியிருக்கும் அன்பர்கள் அன்னையிடம் வந்த பிறகு தங்கள் வாழ்வில் நடந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்பினால் முன் வந்து பேசலாம். இதன் மூலமாகப் புதிதாக வந்த அன்னை அன்பர்களுக்கு அன்னையின் சக்தி எப்படிச் செயல்படுகிறது என்பதைத் தெரிந்து கொள்ள உதவியாயிருக்கும்”.

கூட்டத்தில் அமர்ந்திருந்த அர்ச்சனாவிற்கு மனம் படபடவென்று அடித்துக் கொண்டது. போன வாரம் அலுவலகத்தில் ஏற்பட்ட அனுபவத்தை எல்லோருக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற ஆசை ஒரு பக்கம். கூட்டத்தில் பேசிப் பழக்கமில்லை. நிறைய தலைகளைப் பார்த்தாலே கைகால்கள் வெடவெடவென்று நடுங்கும். ஒருவாறு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு தயக்கத்துடன் எழுந்தாள். கூட்டத்தினர் அனைவரும் யாராவது எழுந்திருக்க மாட்டார்களா என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். தலைவரும் இவளை ஊக்குவிப்பதுபோல் ‘வாங்கம்மா ஏன் தயக்கம்?’ என்றது தைரியமூட்டவே அர்ச்சனா மனதுக்குள், ‘அம்மா கூட்டத்தில் பேசிப் பழக்கமில்லை எனக்கு, இன்று பேசப் போவது நானில்லை நீங்கள்தான்’ என்று வேண்டியவாறு மைக் அருகே சென்று பேசத் தொடங்கினாள்.

‘நான் ஒரு வங்கியில் வேலை செய்கிறேன். எங்கள் அலுவலகத்தில் நிறைய அன்னை அன்பர்கள் இருக்கிறார்கள். உணவு இடைவேளையில் சாவித்திரி படிப்போம். போன வாரம் ஒரு அதிகாரி என்னிடம் வந்து இது என்ன படம்? பாண்டிச்சேரி அன்னையா?

இது என்ன புத்தகம்? ஒஹோ என்று கேலியாகக் கேட்டுவிட்டுப் போய் விட்டார். என் மனதுக்குள் ஒரே நடுக்கம். அவர் கேலியாகப் பேசியது மட்டும் என் மனதை மிகவும் உறுத்திக் கொண்டிருந்தது. அந்த அதிகாரி நல்லவர்தான், வேலையிலும் வல்லவர், ஆனால் பேச்சில் சிறிது கேலி இருக்கும். இன்னும் ஒரு வருடத்தில் ஒய்வு பெறப் போகிறவர். இது நடந்து இரண்டு நாட்கள் கழிந்திருக்கும். வழக்கமில்லாத வழக்கமாக அந்த அதிகாரியின் முகத்தில் கலக்கம். ஒரு முக்கியமான பைலைக் **(file)** காணவில்லை. பரபரவென்று தேடிக் கொண்டிருந்தார். எனக்கே அவரைப் பார்க்கப் பாவமாக இருந்தது. இது நடந்து மறு நாள் அவர் என்னிடம் வந்தார். “மேடம் நேற்று ஒரு பைலைக் காணவில்லையென்று தேடிக் கொண்டிருந்தேனே, அது கிடைக்கவில்லையென்றால் பெரிய பிரச்சனையாயிருக்கும். இது வரைக்கும் நான் செய்த வேலைக்கெல்லாம் மதிப்பில்லாமல் போய் எனக்குக் கெட்டபெயர் வந்திருக்கும். பைலைத் தேடிக் கொண்டிருந்தபோது திடீரென்று மின்னலடித்தாற்போல் ஓர் எண்ணம் உதித்தது. நேற்று அர்ச்சனாவிடம் அன்னையைப் பற்றி நான் கேலி யாகப் பேசியதன் விளைவோ என்று தோன்றியது. உடனே அம்மா நான் பேசியது தவறு என் தவற்றைத் திருத்திக் கொள்கிறேன். பைலைத் தேடிக் கொடு. நான் ஒரு முறை பாண்டி வந்து உன்னைத் தரிசனம் செய்கிறேன் என்று வேண்டிக் கொண்டேன். என்ன ஆச்சரியம் அடுத்த நிமிடம் பைல் கிடைத்து விட்டது. நிஜமாகவே இவர் மிகவும் சக்தி வாய்ந்த தெய்வம்தான் என்று மன்னிப்புக் கேட்கும் பாணியில் சொல்லிவிட்டுப் போனார். என் மனம் மிகவும் நெகிழ்ந்து போய்விட்டது. என் மன உறுத்தலை உடனேயே போக்கிவிட்ட அன்னையின் கருணையை நினைக்கையிலேயே என் நெஞ்சம் கசிந்தது. ஒரு சிறிய படத்தை மேஜை டிராயரில் வைத்து நான்கு பூக்களை வைப்பதற்கே அன்னை இப்படி அருள் புரிகிறாரென்றால் அவரது மகிமையை என்னவென்று சொல்வது? இது மட்டுமா? என் தோழி கீதா ஒரு ரோஜாப்பூவைக் கொடுத்து இந்தா இதை அன்னை படத்திற்கு வை என்று சொன்னவுடன் சிறிது நேரத்தில் அவள் திரும்பி வந்து மேடம் நீங்கள் ரோஜாப்பூ



கொடுத்த வேளை இத்தனை நாட்களாக சாங்க்ஷன் ஆகாத வீட்டு வசதிக் கடன் எனக்கு சாங்க்ஷன் ஆகி விட்டது. அது மட்டுமா சனிக்கிழமைகளில் வவுச்சர் போடுவது வழக்கமில்லை ஆனால் அன்னையின் அருளால் சனிக்கிழமை என்று கூடப் பார்க்காமல் பணம் கொடுத்திருக்கிறார்கள் என்று மகிழ்ச்சியடைந்தாள். இன்னொரு தோழி வந்து நீ நாகலிங்கபூ கொடுத்தாய். இத்தனை நாள் வாராது என்று நினைத்த பணம் வசூலாகிவிட்டது என்று சொல்லி மகிழ்ந்தாள். இது மாதிரி எத்தனையோ சொல்லிக் கொண்டே போகலாம்’ என்று சொல்லி தன் இடத்திற்குத் திரும்பினாள். கூட்டத்தில் பலத்த கை தட்டல். ஏதோ துணிச்சலில் பேசி விட்டாளே தவிர கைகால்கள் நடுக்கம் வெகுநேரம் நீடித்தது. ஏதாவது தப்பும் தவறும் பேசியிருப்போமோ என்று வெட்கம் பிடுங்கித் தின்றது. மறுநாள் அர்ச்சனா ஒரு திருமணத்திற்குப் போக வேண்டியிருந்தது. கல்யாணக் கூடத்தில் நுழைந்து, அங்கு உட்கார்ந்திருந்தபோது இங்கு சும்மா உட்கார்ந்து கொண்டு புடவை, நகை, வீட்டு வம்பு, மாமியார் கதைகளைப் பேசுவதற்குப் பதிலாக யாராவது அன்னை பக்தர்கள் இருந்தால் உருப்படியாகப் பேசலாமே என்ற எண்ணம் தோன்றியது. அடுத்த ஐந்தாவது நிமிடம் முன்பின் தெரியாத ஒரு பெண்மணி வந்து வணக்கம் என் பெயர் சரோஜா நேற்று தியானக் கூடத்தில் நீங்கள் உங்கள் அனுபவத்தைப் பிசிறு தட்டாமல் அற்புதமாகப் பேசினீர்கள். நானும் ஒரு அன்னை பக்தைதான். எனக்குக்கூட என்னுடைய அனுபவத்தைக் கூற வேண்டும் என்று ஆசை, ஆனால் தைரியமில்லை என்று சொன்னவள் தன்னருகிலிருந்த கணவரை அழைத்து இதோ பாருங்களேன் நேற்று தைரியமாகப் பேசினார்கள் என்று கூறினார்களே அவங்க வந்திருக்காங்க என்று அர்ச்சனாவை அறிமுகப்படுத்தினாள். அர்ச்சனாவிற்கு தலைகால் புரியவில்லை மேடம் நானும் உங்களைப் போலத்தான் கூட்டத்தில் பேசிப் பழக்கமில்லை. நான் எங்கே பேசினேன்? அன்னையல்லவா எனக்குள் இருந்து பேசினார்கள். அடுத்த முறை தியானக் கூட்டத்தில் உங்கள் அனுபவத்தைப் பேசுங்களேன்.

சரோஜா உடனே வேகமாகத் தலையை மறுத்து ஆட்டினாள். ஐயோ எனக்கு நினைக்கவே பயமாயிருக்கிறது நான் மாட்டவே மாட்டேன்.

சரி போகட்டும் கூட்டத்தில் பேச வேண்டாம் என்னிடமாவது உங்கள் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வீர்களா? ஆக்ஷேபணை இல்லையென்றால் சொல்லுங்கள். நான் கேட்க மிகவும் ஆவலாயிருக்கிறேன்.

அதற்கென்ன தாராளமாகச் சொல்கிறேன். நான் முதலிலிருந்து ஆரம்பித்துச் சொல்கிறேன். என்னைப் பொருத்தவரையில் சிறு வயதிலிருந்து எனக்குத் தெய்வ பக்தி அதிகம். யார் எந்த தெய்வத்தை அறிமுகப்படுத்தினாலும் ஏற்றுக் கொண்டு வழிபட ஆரம்பித்து விடுவேன். அதே மாதிரி ஒரு நாள் என் தோழியிடம் அடிக்கடி என் குழந்தைகளுக்கு உடம்பு படுத்துவதைக் கூறி வருத்தப்பட்டேன். அதற்கு அவள் உடனே அன்னையின் படத்தை என்னிடம் கொடுத்து இவரை வழிபட்டு வா உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும் என்று கூறினாள். நானும் அதை வழக்கம்போல் வைத்து வழிபட்டு வந்தேன். ஒரு நாள் அவள் வீட்டுக்கு வந்திருந்தபோது இதோ பார் சரோஜா, அன்னையின் மகிமையைச் சாதாரணமாக எண்ணி விடாதே, நீ வழிபடும் மற்ற தெய்வங்களோடு பத்தோடு பதினொன்றாக வைத்து வழிபடக் கூடாது. அன்னை மனித வடிவம் எடுத்து வந்த பராசக்தியின் அவதாரம். மற்ற தெய்வங்களை வேண்டிக் கொண்டால் அந்த தெய்வங்கள் உதவிக்கு வரும், வராமலி ருக்கும். ஆனால் அன்னை அப்படியில்லை நாம் கூப்பிட மாட்டோமா, நமக்கு அருள் புரிய மாட்டோமா என்று நம் வீட்டு வாசலில் காத்திருக்கும் என்றாள். அன்னைக்கென்று ஒரு தனியிடம் ஒதுக்கி வேண்டி வரலானேன். குழந்தைகள் உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் தெரிய ஆரம்பித்தது.

ஒரு நாள் உறவினர் வீட்டு விசேஷத்திற்காக வெளியே கிளம்ப வேண்டியிருந்தது. எங்கள் புகுந்த வீடு பெரிய குடும்பம். நான்தான் மூத்த மருமகள். குடும்பம் பெரிதென்பதால் அடிக்கடி ஏதாவது



விசேஷங்கள் நிகழ்ந்தபடியிருக்கும் நான் போயே ஆக வேண்டிய சூழ்நிலை. அன்றும் அவசரம் அவசரமாகக் கிளம்பிக் கொண்டிருந் தேன் என் கணவரும் வழக்கமான தொனியில் என்ன சரோஜா ஆச்சா? சீக்கிரம் கிளம்பு என்று அவசரப்படுத்தினார். அவரைக் காக்க வைக்கிறோமே என்ற பதட்டத்தில் மொஸைக் தரையில் சிந்தியிருந்த தண்ணீரில் காலை வைத்தவள் வழுக்கி விழுந்தேன். விழுந்ததுதான் தெரியும் மயக்கமானேன். விழித்துப் பார்த்தபோது காலில் பெரிய கட்டுடன் ஆஸ்பத்திரியில் படுத்திருந்தேன். உடம்பில் வலி. மனத்தில் ஒரே வேதனை. அப்புறம் 4 மாதங்களாக நான் பட்ட கஷ்டம் சொல்லி மாளாது. பணக் கஷ்டம். வீட்டில் உதவிக்கு ஆளில்லாமல் அவஸ்தை. ஒரு வழியாக எழுந்து நடமாட ஆரம்பித்தேன். மனதுக்குள் சங்கடம். என் கணவர் பொறுமைசாலி தான். இருந்தாலும் சில சமயம் கோபிப்பார். வரவர உன் நடையே சரியில்லை பழையபடி நடக்கவே முடியாது போலிருக்கிறது. ஏதோ உடல் ஊனமுற்றவர்கள் நடப்பதுபோல் நடக்கிறாய் என்று சொல்லும்போது மனம் புண்படும். இப்படியிருக்கும்போது அன்னையின் தரிசன நாள் வந்தது. அன்னையின் அறையை வருடத்தில் 2 நாட்கள்தான் திறப்பார்கள். அதில் நவம்பர் 17 அன்னையின் சமாதி நாளும் ஒன்று. நான் மெல்ல என் கணவரை அணுகி என்னங்க என்னை இந்தத் தரிசன நாளுக்குப் பாண்டி அழைத்துப் போவீங்களா என்று கேட்டேன். அவர் திகைத்துப் போய் என்ன விளையாடுகிறாயா? இந்தக் காலை வைத்துக் கொண்டு எப்படிப் பயணம் செய்வாய்? அன்னையின் அறைக்குச் செல்லும் படிகளில் எப்படி ஏறுவாய்? எனக்கென்னவோ போக வேண்டுமென்று தோன்றுகிறது. அன்னைமீது பாரத்தைப் போட்டுவிட்டுக் கிளம்பலாம். இவரும் அதிகம் மறுத்துப் பேசாமல் என்னுடன் கிளம்பினார். அன்னையின் அறைக்குள் நுழைய டோக்கன் வாங்கிக் கொண்டு மிகவும் கஷ்டப்பட்டுப் படிகளில் ஏறினேன் அன்னையின் அறையில் ஒரு சாய்வு நாற்காலியில் **Sweet Mother** படத்தை ஒரு வெள்ளை சாட்டின் துணியில் வைத்திருந்தார்கள். **New Creation** என்று சொல்லப்படும் வெண்ணிற சம்பங்கிப் பூக்களைப் பாங்குடன்

நேர்த்தியாக அடுக்கியிருந்தார்கள் மிகவும் பரவசத்துடன் அன்னையைத் தரிசித்து விட்டுத் திரும்பியபோதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது.

அன்னையின் அறையை விட்டு வெளியே வந்து நடக்க ஆரம்பித்த உடனேயே என்னுடைய நடையில் ஒரு மிகப் பெரிய மாறுதல் தெரிந்தது. காலை விந்தி விந்தி நடக்காமல் வழக்கம்போல் சாதாரணமாக நடப்பதை உணர்ந்தேன். மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போனேன். ஆசிரமத்தை விட்டு வெளியே வந்த உடனே என் கணவரை நோக்கி இதோ பாருங்களேன். நான் முன்பு போல் நன்றாக நடக்கிறேன். என்னால் நன்றாக நடக்க முடிகிறது என்று என்னையறியாமல் கூக்குரலிட்டேன். என் கணவர் நம்ப முடியாமல் உனக்கு ஏதாவது பிரமையாயிருக்கும் எங்கே மறுபடி நடந்து காட்டு பார்க்கலாம் என்றார். நானும் அப்பொழுதுதான் புதிதாக நடக்கக் கற்றுக் கொண்ட குழந்தை போல் குறுக்கும் நெடுக்குமாக நடந்து காட்டினேன். அப்புறம் எங்கள் இருவருக்கும் ஏற்பட்ட உணர்ச்சிப் பெருக்கை விவரித்துச் சொல்லவும் வார்த்தைகளில்லை. நமக்கு எந்த நல்லது நடந்தாலும் அன்னையை நன்றியுடன் நினைத்து மனதார வணங்க வேண்டும் என்று கட்டுரையில் படித்தது ஞாபகம் வர மறுபடியும் சமாதிக்குச் சென்று அன்னைக்குக் கண்ணீர் மல்க நன்றி கூறி வணங்கி வந்தோம். அன்றிலிருந்து அன்னைதான் எங்கள் இஷ்ட தெய்வம். குல தெய்வம் எல்லாம்.

அடுத்தமுறை அன்னையின் தரிசன நாளன்று என் பெண்ணுக்கு டைபாய்டு காய்ச்சல், இருந்தாலும், அம்மா நீ குழந்தையைப் பார்த்துக் கொள். நான் உன் அறையைத் தரிசிக்க வருகிறேன் என்று கூறி டோக்கன் க்யூவில் முதல் நாள் முன்னதாகவே சென்று முதல் ஆளாக நின்று மறுநாள் காலை 7 மணிக்கு அறைத் தரிசனம் செய்து விட்டுத் திரும்பினேன். அது மட்டுமில்லை, மாதம் ஒரு முறை பாண்டிக்குச் சென்று வருவேன். நான் எங்கும் தனியாகப் போய் பழக்கமில்லை. பாண்டிக்கு மட்டும் என் கணவர் வந்து அதிகாலையில் பஸ் ஏற்றி விடுவார். போய்விட்டு



மாலைக்குள் திரும்பி விடுவேன். அது கூட ஒவ்வொரு முறை போகும் போதும் கணவர் என்ன செய்வாரோ குழந்தைகள் நான் இல்லாமல் என்ன கஷ்டப்படுமோ என்ற நினைவுடன் செல்வேன். அதற்கு என் தோழி ஒருத்தி நீ அன்னையைப் பார்க்கச் செல்லும்போது வீட்டையும் அதிலுள்ளவர்களையும் அன்னையிடம் ஒப்படைத்துவிட்டு நிம்மதியாகச் செல்ல வேண்டும். அவர்களை நினைத்தால்தான் பிரச்னை வரும் என்றாள். அதிலிருந்து நானும் பாண்டி கிளம்பு முன்பு அம்மா நான் உன்னைப் பார்க்க வருகிறேன் நான் உன்னுடைய பெண். இவர் உன்னுடைய மாப்பிள்ளை. இந்தக் குழந்தைகள் உன் பேரன் பேத்திகள். இவர்களைப் பார்த்துக் கொள்வது உங்கள் பொறுப்பு என்று சொல்லிவிட்டு நிம்மதியாய் அம்மாவைத் தரிசித்துவிட்டு வருவேன் என்று சொல்லிக் குழந்தை போல் வெகுளித்தனமாய் கலகலவென்று சிரித்தாள்.

இதைக் கேட்ட அர்ச்சனாவுக்கு உடல் சிலிர்த்தது. எத்தனை அற்புதமான அனுபவம் இது. இன்று இந்தத் திருமணத்திற்கு வந்தது வீண் போகவில்லை. நேரம் உபயோகமாகக் கழிந்தது என்ற ஆழ்ந்த திருப்தியுடனும் மனநிறைவுடனும் வீடு திரும்பினாள்.

❋ ❋ ❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பிரச்சனை ஆழத்திலும், பிரார்த்தனை மேலெழுந்த வாரியாகவும் இருந்தால், நெடு நாள் பிரார்த்தனை செய்தாலும் பலனிருப்பதில்லை.

***மேலெழுந்த பிரார்த்தனை ஆழத்துப் பிரச்சனையைத் தீர்க்காது.***

"Conversation"

# பிரார்த்தனை பலிக்க வேண்டும்

தம்பி - சமர்ப்பணம் முக்கியம், சமர்ப்பணம் மட்டுமே முக்கியம். அது முடியவில்லை என்பதால் நாம் சேவை , பக்தர், சாதகர் என்பவற்றைக் கருதுகிறோம். நாம் இவர்களுடன் அன்னைமூலமே தொடர்பு கொள்ள வேண்டும், நேரடியாகத் தொடர்புகொள்வது தவறு.

அண்ணன் - ஆசிரமம் ஆரம்பித்த காலத்தில் இரு சாதகர்கள் வேலைக்காகத் தவிர, வேறு விஷயமாகச் சந்திக்கக் கூடாது என்று கண்டிப்புச் செய்திருந்தார் என்றபொழுது, நமக்கு ஏன் அன்னை விலக்கிய அத்தொடர்பு? அவர்கள் வாழ்வை நாமறிய வேண்டும், விமர்சிக்க வேண்டும் என்பது நமக்குத் தேவையில்லாதது. இதே சட்டம் மற்ற பக்தர்களுக்கும் பொருந்தும்.

தம்பி - அன்னை சட்டப்படி உள்ள தொடர்பு சரி. மற்றது சரியில்லை அல்லவா?

அண்ணன் - இந்தச் சட்டத்தை பின்பற்றுபவர்களை யாராவது உனக்குத் தெரியுமா? நாமரிவரும் எந்த அளவுக்குத் தேறுவோம்?

தம்பி - பிறரை விடு, நாம் 10% கூட தேறமாட்டோம் என்று தெரிகிறது. அன்னை சட்டத்தைப் பின்பற்றாமல் நாம் பக்தர் எனக் கூறுவது நமக்குச் சரியில்லை. **Mother is an organisation of consciousness** என்பதை எப்படி விளக்கமுடியும்?

அண்ணன் - **Skill, capacity** திறமை என்பவை என்ன? நாம் எழுதுகிறோம். உடை உடுத்துகிறோம், ஆபீஸ் வேலை செய்கிறோம். இதில் என்ன நடக்கிறது? நம் சக்தி **energy** செலவாகிறது. லீவு நாளில் நம் சக்தி **energy**



விரயமாகிறது. வேலை செய்தால் வேலையில் சக்தி பலன் தருகிறது. பலன்தர சக்தியை **energy**ஐ **organise** செய்யவேண்டும். **Skill and capacity are organisations of physical energy.** செயலுக்குள்ள சக்தியை முறைப்படுத்தினால் திறமை வருகிறது.

அழகாகப் பேசுகிறான் ராமன், பலரும் அவனை விரும்புகிறார்கள். அவனை நாடி வருகிறார்கள். எரிந்துவிழுந்தால், முகத்தைத் தூக்கிவைத்துக் கொண்டால், பாராமுகமாக இருந்தால் எவரும் அருகே வருவதில்லை. பலரும் விரும்புவதால் பலர் சேர்ந்து செயல்பட முடிகிறது. ராமனால் காரியத்தைச் சாதிக்கமுடிகிறது. இது என்ன? **This is organisation of vital energy.** உணர்வின் சக்தியை முறைப்படுத்தினால் காரியம் கூடிவருகிறது. பொதுவாக **(physical organisation** யை விட **vital organisation)** செயலுக்குரியதைவிட உணர்வுக்குரியமுறை 10,50 மடங்கு பலன் தரவல்லது. தச்சன் செயலுக்குரியவன். வியாபாரி உணர்வுக்குரியன், தச்சன் என்றும் வியாபாரி போல் சம்பாதிக்க முடியாது. வியாபாரம் பெரியது. உணர்வுக்குரியது. தச்சுவேலை வேலைக்குரியது. ஒரு கம்பனிவைத்து **technology** டெக்னாலஜிமூலம் சோப்பு, ஷாம்பு, கார்போல பொருள்களை உற்பத்தி செய்து வியாபாரம் செய்வது அறிவுக்குரிய முறை. **It is organisation ideas** கம்பனி என்பது ஒரு **idea** கருத்து. டெக்னாலஜி என்பது ஓர் **idea** கருத்து. கருத்தை எடுத்து முறைப்படுத்தி செயல்படுத்தினால் அது **physical vital, vital capacity** செயல், உணர்வு போன்றவற்றைவிட ஆயிரம் மடங்கு பெரியது. **Organisation** என்பது, முறைப்படுத்துவதாகும். அது செயலிலும், உணர்விலும், அறிவிலும் உண்டு.

படிப்படியாக உயரக்கூடியது. படிப்படியாக எனில் ஒன்று, பத்து, நூறு, ஆயிரம் என்றபடி உயரும் தன்மையுள்ளது. விசேஷம் **organisation** முறையில் உள்ளது. இதற்கடுத்தாற்போல் முனிவர், ரிஷி, யோகி, தெய்வம், சத்தியஜீவியம் கடந்து **consciousness** ஜீவியம் உள்ளது. **Organisation**யை அங்கு பார்த்தால் அது அன்னை யாகும். **Mother is organisation of consciousness**. ஒவ்வொரு நிலையாக விளக்கலாம். படிப்படியாகப் புரியும். புரிவது விசேஷமில்லை. செய்வதே முக்கியம்.

தம்பி – என்ன செய்ய வேண்டும்?

அண்ணன் – தெய்வங்கள் சக்தி வாய்ந்தவை. அவர்களின் பிறப்பிடம் சத்தியஜீவியம். தெய்வங்கட்கும் உலகுக்கும் தொடர்பில்லை. மனிதன் தெய்வத்தை துதித்த துதி அவர்கள் காதில் விழுந்தால், அவர்கள் சக்திமூலம் வரம் தருகிறார்கள். மனிதனைப் பொருத்தவரை தெய்வங்கட்கு கடமையில்லை, தொடர்பும் இல்லை என்று கூறிய பகவான் நாம் அறிந்த வேறு சிலவிஷயங்களையும் சுட்டிக் காட்டுகிறார்.

* மனிதன் தவம் பலித்து மோட்சம் பெற தெய்வங்கள் தடையாகவுமிருக்கும். அன்னை சத்திய ஜீவியத்தைக் கடந்த ஜீவியத்தில் உற்பத்தியானவர்கள். நம்மைத் தேடிவரும் தெய்வம். நம் நியாயமான பிரார்த்தனை களை கேட்டவுடன் கொடுப்பவர்கள். நாம் அன்னையை நிபந்தனையின்றி ஏற்க வேண்டும், அதாவது,
* நம் சௌகரியத்திற்காக ஏற்பதைவிட, அன்னைக்கா கவே ஏற்க வேண்டும்.
* மனித உறவை அன்னை மூலம் மட்டும் நாடவேண்டும்.
* மனம் நல்ல எண்ணத்தால் மட்டும் நிரம்பியிருக்க வேண்டும்.



* அன்னையைப் பிறருக்கு நம் ஆசைக்காகக் கொடுக்க முயலக்கூடாது.
* சமர்ப்பணத்தை முக்கியமாகக் கருதவேண்டும். சமர்ப்பணத்தை மட்டும் முக்கியமாக ஏற்றுக் கொள்ளவேண்டும்.

தம்பி – நானிதைச் செய்ய விருப்பப்படுகிறேன். அறிவுக்கடுத்த நிலைகளையும் விளக்கமாக அறிய விரும்புகிறேன்.

அண்ணன் – அவை அறிவைவிடப் பல ஆயிரம், லட்சம் மடங்கு சக்தி வாய்ந்தவை என்று அறிந்தால் போதும். அறிவைவிட உயர்ந்த நிலைகட்கு உதாரணம் தரமுடியாது என்பதால் பொதுவாகவே பேசமுடியும்.

**Bill Gates** இன்று $100 **Billion** சம்பாதித்தார் எனில் அது எப்படி? கம்ப்யூட்டர் அறிவை முறைப்படுத்துகிறது **organises knowledge.** அதைச் செய்தால் மட்டும் ஒருவர் இவ்வளவு சாதிக்க முடியுமென்றால், சாதாரண மனிதன் தனக்குத் தேவையான அறிவை முறைப்படுத்தி பெருஞ் செல்வம் சம்பாதிக்கலாமல்லவா? அது செய்தால் போதும்.

தம்பி – என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள்.

அண்ணன் – நான் கூறுவதில் இரண்டு பாகம் உண்டு. ஒன்று கீழிருந்து நாம் செய்ய வேண்டியது **organise knowledge from below** அறிவை முறைசெய்ய வேண்டும். அடுத்தது மேலிருந்து அன்னை செய்ய வேண்டியது. அதற்கு அன்னையைக் கூப்பிட்டால் போதும். நம் பாஷையில் சொன்னால்,

* நம் அறிவுக்கெட்டியவற்றை எல்லாம் முழுவதும் செய்து முடித்துவிட்டு அன்னையை அழைக்க வேண்டும். அப்படிச் செய்தால் செய்பவர் வருமானம் 10 அல்லது

100 மடங்கு உயரும். அதைச் செய்தவர் செய்தபின் கேட்டால் விளக்கங்களை ஏராளமாகக் கூறலாம்.

தம்பி – இதை நாம் பல முறையில்லாவிட்டாலும், சில முறை கண்டிருக்கிறோம். பலன் பெற்றவர் சொல்லாமல் நம்மை விட்டு விலகிவிடுகிறார் என்றும் பார்க்கிறோம். நான் இதை ஏற்றுக் கொள்கிறேன். முடிந்தவரை அடுத்த நிலைகளையும் விளக்கவேண்டும்.

அண்ணன் – மனிதனுடைய அதிர்ஷ்டத்திற்கு **mental organisation** அறிவின் முறையை விட மேலேபோக வேண்டிய அவசியமில்லை. அதன்மூலம் செய்த சாதனை **Bill Gates** னுடையது. நம் அறிவுக்குரியனவெல்லாம் நாம் செய்து முடித்தவுடன் அன்னை செயல்பட ஆரம்பிப்பதால், நமக்கு இந்த நிலை என்ன அதிகபட்சம் கிடைக்குமோ அது கிடைத்து விடுகிறது. முனிவருக்குடையது மௌனம். **Silentwill** மௌனசக்தி அதற்குரியது. அதுவே அதன்முறை. **It is the organisation of silence**. நம் மனதிலுள்ளதைப் பிறரிடம் கூறாவிட்டால் அவரே அதை நமக்குச் சாதகமாகத் தெரிவிக்கின்றார் என்பதே. இதை ஒருவர் சாதித்தால், உலகில் அவரால் முடியாதது என்றுண்டோ? அது எவ்வளவு பெரிய திறமை. இன்று உலகில் எவரும் பெற்றில்லாத திறமை அது.

அடுத்தது ரிஷியின் நிலை. மௌனத்தைக் கடந்த ஜோதி நிலை. இந்த நிலையில் **we organise light.** ஜோதியின் முறை மௌனத்தின் முறையை உட்கொண்டது. உலகின் நிகழ்காலம், கடந்த காலம், எதிர்காலம் திருஷ்டியாகத் தெரியும் நிலையிது.

அடுத்தது யோகி. **Here man organises direct knowledge.** மனம் அறிவால் செய்வதை, முனிவர்



மௌனத்தாலும், ரிஷி ஒளியாலும் செய்கிறார். யோகி அறிவு, மௌனம், ஒளி என்ற **intermediate instrument** கருவிகளின் உதவியின்றி நேரடியாக உலகத்தை ஞானத்தால் அறிகிறார்.

தெய்வநிலை அடுத்தது. தெய்வங்களுக்குள்ள சக்திகளை நாம் அறிவோம். **They have the knowledge, need not seek it.** யோகி ஞானத்தை நாடவேண்டும். தெய்வம் அதை நாட வேண்டாம். தனக்கே ஞானமுடையது தெய்வம். ஆனால் அறியாமை இங்கும் தொடரும். **Gods organise knowledge. They possess it, but it is accompanied by ignorance.** யோகி எதை முறையாகப் பெற வேண்டுமோ அதை தெய்வம் இயல்பாகப் பெற்றுள்ளது.

அடுத்தது சத்தியஜீவியம். **Supermind organises nothing. It determines.** சத்திய ஜீவியம் எந்த முறையையும் தேடவேண்டாம். அதுவே முடிவு செய்கிறது. மனிதனும், தவசியும் எந்த முடிவைப் பல்வேறு முறைகளால் தேடுகிறார்களோ, **அந்த முடிவை நிர்ணயிப்பது சத்தியஜீவியம். Supermind organises determinisms.** முடிவை முறை செய்வது சத்தியஜீவியம் எனலாம்.

அடுத்த நிலை ஜீவியம் **Consciousness.** முடிவை நிர்ணயம் செய்யும் சத்திய ஜீவியத்தை உற்பத்தி செய்வது 'சித்' என்றும் **consciousness** எனவும் நாம் கூறும் ஜீவியம். **Mother is the organisation of this original consciousness.** இந்த ஜீவியத்தின் முறை அன்னை என்பது.

**நாம் இதைச் செய்ய முடியாது. இதன் பலனைப் பெறமுடியும்.**

மனிதன் ஜீவியத்தை முறைப்படுத்தினால் அன்னையாகிறான். அது தத்துவரீதியாக முடியும். இன்று பிரச்சினை அதில்லை. நாம் செய்யும் காரியங்கள் அன்னை செய்வதுபோல் பூர்த்தியாக நாம், நம்மால் முடிந்ததை முடித்துவிட்டு, அன்னையை அழைக்கவேண்டும்.

தம்பி – இந்த விளக்கம் திருப்தியாக இருக்கிறது. நம் நிலையில் என்ன வேண்டும் என்று தெரிகிறது.

அண்ணன் – இதை அறிந்தவர் – செய்பவரில்லை – உண்டா! எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிந்தவரை நான் அறியேன். இதை அறிவதும், செய்வதும், நல்லது.

தொடரும்


## யோக வாழ்க்கை

**Life Divine** இல் உள்ள கருத்துகளை வாழ்க்கையில் பொருத்தி எழுதிய 6000 கருத்துகளில் முதல் 2000 கருத்துகள் அடங்கிய நூல், **"யோக வாழ்க்கை''**


**Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 177, Pappammal Koil Street, Pondicherry-12 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.**

**Editor: Karmayogi**

## சிங்கம் - பாதுகாப்பு சின்னம்

அன்னை நமக்கு அளிப்பன அநேகம். அவற்றுள் பாதுகாப்பு ஒன்று. நம்மைச் சுற்றி இயல்பாகக் காற்றிருப்பதைப்போல் பாதுகாப்புச் சூழலை அன்னை நினைவு நமக்குத் தருகிறது. வீட்டைவிட்டு வெளியே போனவர் பத்திரமாகத் திரும்ப வரவேண்டும் என பயப்படுபவருண்டு. அவரிடம் மற்றவர்கள், ‘‘தினமும் வெளியில் போனவர் திரும்புகிறார். இப்படிப் பயந்தால் என்ன செய்ய முடியும்? நல்ல காலம் உள்ளவரை நல்லது நடக்கும். இதெல்லாம் நம் கையில் இல்லை. பயப்படக்கூடாது'' என்பார்கள். பயம் பல வகையின. வீட்டில் பெண்குழந்தைகளைத் தனியாக விட்டுவிட்டுப் பல நாள் யாரும் வெளியில் போகமாட்டார்கள். அது நிஜமாகப் பயப்பட வேண்டியது. சிலருக்கு வீட்டில் எத்தனை பேரிருந்தாலும் பயம் பிடுங்கித் தின்னும். அது வேறு வகை.

அன்னை பாதுகாப்பை நேடிரயாகவும், பாதுகாப்பு மலர் மூலமாகவும் கொடுக்கிறார்கள். மாநிலத் தலைநகரம். வாடகை வீடு. தெருக் கதவு சரியில்லை. வேகமாகத் தள்ளினால் உடைந்து வழிவிடும். தகப்பனார் பலநாள் வெளியூர் போகின்றவர். தாயும் பெண் குழந்தைகளும் பயப்படுவது இயல்பு. அன்னையை அறிந்தபின் ஒரு பெண் அன்னையைப் பாதுகாப்பு கேட்டாள். அவள் கனவில் அன்னை சிறு சிங்கக் குட்டிகள் பல எடுத்து வருவதாகக் கண்டாள். அது அந்த காலனி முழுவதும் சிங்கக்குட்டிகளால் நிரம்பப்பட்டதாகத் தெரிந்தது. அதுமுதல் வீட்டில் எவருக்கும் பழைய பயமில்லை. பயம் போய்விட்டது.

ஒரு பிரெஞ்சுச் சாதகரிடம் அன்னை, ‘‘உங்களுக்கு என்ன வேண்டும், இங்கு - அன்னை அறையில் - இல்லாதது இல்லை. சிங்கம் தவிர மற்ற அனைத்தும் உள'' என்றவர், வேறொரு சமயம் தம் அறையில் பல சிங்கங்கள் இருப்பதாகவும், அவை சிறுகுழந்தைகள் போல் சிரிப்பதாகவும் கூறினார் என்பது வாசகர் அறிந்தது.

**சிங்கம் பாதுகாப்புச் சின்னம். அது அன்னையின் பாதுகாப்புக்கு அடையாளம்.**

## தரிசனம்

**Life Divine** நூலைப் படித்த பெண் தன் தலைவழியாக ஒளிப்பிரவாகம் புகுந்து உடலெல்லாம் பரவி, அணுக்களை அடைந்து தங்குவதைக் கண்டார். அங்கு தங்கிய ஜோதி அவ்வணுக்களைக் கரைக்க ஆரம்பித்தபொழுது, உடலும், ஜீவனும் புல்லரித்தன.

அன்னை காலில் தங்கக் கொலுசு போட்டிருந்தார். மேல் நாட்டுக்காரரானதால் அன்னையை ஏற்றுக்கொள்ள பலரால் முடியவில்லை. அப்படிப்பட்டவர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்த பொழுது அன்னை தம் பாதங்களை ஒரு ஸ்டூல் மீது எடுத்துவைத்தார். கொலுசுகள் தெரியும்படி உட்கார்ந்தார். பாதங்கள் பொன்மயமாக மாறின. பக்தர் சந்தேகம் தீர்ந்தது. பாதங்களை சிக்கெனப் பிடித்துக்கொண்டார். இதுபோன்ற அனுபவங்கள் ஏராளம். அவற்றுள் ஒன்று.

‘‘இன்று அன்னை ரூம் தரிசனம் சென்ற முறையைவிட அதிக **powerful** ஆக இருந்தது. உள்ளே நுழைந்தவுடன் **force** என்னுள்ளே மிகமிக வேகமாக நுழைந்ததை நன்றாகவே உணர முடிந்தது. அறையைவிட்டு வெளியே வரும்பொழுது ஏதோ கனவுலகத்தில் நடப்பதுபோல் தானாகவே நடந்து செல்லும் உணர்ச்சி ஏற்பட்டது. அன்னையின் **sweet love** யை இம்முறை உணர முடிந்தது. அவரறையில் **couch**ல் அன்னை உட்கார்ந்திருப்பதை, கால்களை நீட்டி வெண்ணிற உடையில் இருப்பதைப்போன்ற நிதர்சனமான காட்சி இம்முறை கிடைத்தது. காலை 8மணிக்கு உள்ளிறங்கிய **force** இன்னும் தலையை அழுத்திக் கொண்டேயிருப்பதை உணரமுடிகிறது''. அன்னை பிறந்ததினத் தரிசனத்தின்போது அன்பர் பெற்ற அனுபவம் இது.

இதே அன்பருக்கு ஆபரேஷன் நடக்கும்பொழுது அன்னை அருகில் வெள்ளைப்புடவையுடுத்தி ஆபரேஷன் முடியும்வரை உட்கார்ந்திருந்ததைக் கண்டார்.